விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 14 சனிக்கிழமை (28.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 191

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## ஐ.நா கூட்டத் தொடர் நேற்றுடன் நிறைவு!

### 48 பிரேரணைகள் சமர்ப்பிப்பு

*(ஜெனிவா)* — *ஜெனிவாவில் கடந்த 10-ம் திகதி ஆரம்பமான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 26-வது கூட்டத்தொடர் நேற்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைந்தது.*

*இந்தக் கூட்டத் தொடரில் நாடுகளின் மனிதவுரிமை நிலைமைகள் மற்றும் பொதுவான மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பில் 48 பிரேரணைகள் உறுப்பு நாடுகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.*

இக்கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் உரை நிகழ்த்திய ஐ.நா மனித வுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கையில் பொறுப்புக்கூறலையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான பரந்துபட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்கான நிபுணர்கள் மற்றும் விசேட அறிக்கையாளர்கள் உள்ளடங்கிய விசாரணைக் குழுவை நியமித்துள்ளதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ள ஐ.நா, குழுவுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக

20 ஆம் பக்கம் பார்க்க....

### புலிகளுக்கு எதிராக பொய்குற்றச்சாட்டு
### த.தே.கூ தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் போலியாக குற்றச்சாட்டுகளை தயார் செய்து வருவத்ாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ப. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

சில முஸ்லிம்களின் முறைப்பாட்டின் அடிப்படையில் மட்டக்களப்பு குருக்கள்மடத்தில் உள்ளதாக கூறப்படும் மனித புதைகுழியை தோண்ட இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆனால் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான படுகொலைகள் தொடர்பில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ள போதும், அவை குறித்து அரசாங்கம்

20 ஆம் பக்கம் பார்க்க....

## மத்திய அரசின் பிடியில் வடக்கின் 4 கோடி ரூபா
### முதலமைச்சர் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

மத்திய அரசாங்கம் வட மாகாண சபைக்கான 4 கோடி ரூபாவை முடக்கிவைத்துள்ளது என்று வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் குற்றம்சாட்டியுள்ளார்.

கிளிநொச்சி வட்டக்கச்சி புளுதி ஆறு ஏற்று நீர்ப்பாசன திட்டத்தொடக்க விழா நேற்று வட்டக்கச்சியில் சிறப்புற நடைபெற்றது. வட மாகாணசபையின் திட்டத்தின் கீழ் வட மாகாண விவசாய கமநலசேவைகள் கால்நடை அபிவிரு

20 ஆம் பக்கம் பார்க்க....

### குடும்பப் பெண் மீது வாள்வெட்டு

(புன்னாலைக்கட்டுவன்)

கணவனால்வெட்டப்பட்டமனைவி படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் 2 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஈவினைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் பரமசிவன் ராசு (வயது-70) என்பவரே படுகாயமடைந்தவராவர்.

மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்த கணவனாலேயே மேற்படி

20 ஆம் பக்கம் பார்க்க....

## நவிபிள்ளையின் குழு அரசுக்கு ஆளில்லா விமானத் தாக்குதல்
### அரசியல் விமர்சகர் கருத்து

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணைக்குழுவிற்கு உதவ ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை நியமித்துள்ள நிபுணர்கள் குழு இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான ராஜதந்திர ரீதியிலான ஆளில்லா விமான தாக்குதல் என இலங்கையின் முன்னாள் இராஜதந்திரியும் சிரேஷ்ட அர



சியல் விமர்சகருமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் அளுத்கமவில்

20 ஆம் பக்கம் பார்க்க....

### நீரில் மூழ்கும் அகதிப் படகு

(கொழும்பு)

கிறிஸ்மஸ் தீவில் இருந்து சுமார் 300 கிலோ மீற்றர் தொலைவில் புகலிடக் கோரிக்கையாளர்கள் அடங்கிய படகொன்று நீரில் மூழ்கும் அபாயத்துடன் தத்தளிப்பதாக தகவல் வெளியான போதிலும், அரசாங்கம் அதனை ஊர்ஜிதம் செய்ய மறுத்திருக்கிறது.

இந்தப் படகிலுள்ளதாகக் கூறப்படும் 153 பேரில் இருவரிடம் பேசியதாக ஊடக ஒன்று நிறுவனம் அறிவித்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க....

## அமெரிக்காவின் தடையை மீறி ஈரானிடம் எண்ணெய் கொள்வனவு
### கூற்றை மறுக்கிறார் அமைச்சர்

(கொழும்பு)

அமெரிக்காவின் தடையை மீறி மூன்றாவது தரப்பின் ஊடாக ஈரானிடம் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்யவில்லை என்று பெற்றோலியத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தடையை மீறி மூன்றாவது தரப்பின் ஊடாக அரசாங்கம் ஈரானிடம் இருந்து எண்ணெயை இறக்குமதி, செய்கிறது என செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அவர் செய்தியாளர்களிடம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2011ஆம் ஆண்டு ஈரானுக்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதித்த பின்னர், அந்த தடையை மீறி மூன்றாவது தரப்பின் ஊடாக ஈரானிடம் இருந்து ஒருமுறை கூட எண்ணெயை கொள்வனவு செய்யவில்லை.

அமெரிக்காவின் சம்மதத்துடன்

20 ஆம் பக்கம் பார்க்க....

### ஜனாதிபதி நேற்று சீஷெல்ஸ் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று சீஷெல்ஸ் நாட்டிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேறகொண்டார்.

கடந்த புதன்கிழமை மாலை தீவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அந்நாட்டின் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தார்.

மாலைதீவின் உப ஜனாதிபதி கலாநிதி மொஹம்மத் ஜமீல் அஹமத்துடன் நேற்றுமுன்தினம் குரும்பா தீவில் நடைபெற்ற பேச்சுவார்

20 ஆம் பக்கம் பார்க்க....

## வன்முறைகளையடுத்து சுற்றுலாத்துறையில் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுற்றுலா அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட அமைதியான சூழலின் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இதன் காரணமாக இலங்கைக்கு அதிகளவில் அந்நியச் செலாவணி கிடைத்தது.

இந்நிலையில் தமிழ் மக்கள் மீதான இலங்கை அரச அடக்கு முறை தொடர்வது பற்றிய கண்டனங்கள் காரணமாக சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு அவப் பெயர் ஏற்பட்டது. அன்று தொடக்கம் சுற்றுலாத்துறை வீழ்ச்சியை சந்திக்கத் தொடங்கியது.

இவ்வாறான நிலையில் முஸ்லிம்களுக்கு எதிரான ஹலால் பிரச்சினையை அடுத்து முஸ்லிம் நாடுகளின் சுற்றுலாப் பயணிகளும்

20 ஆம் பக்கம் பார்க்க....

### நயினையில் இன்று கொடி



(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஜூலை

19 ஆம் பக்கம் பார்க்க....

## 'அலறல் கேட்டு வந்தேன்' என் மீதும் வெட்டு வீழ்ந்தது!
### முக்கொலை தொடர்பில் யசோதரன் சாட்சி

(யாழ்ப்பாணம்)

முக்கொலை செய்த தனஞ்சயனுக்கும் எனக்கும் தனிப்பட்ட பகையில்லையென தனஞ்சயனின் வாள்வெட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பிய தங்கவேல் யசோதரன் நேற்று நீதிமன்றில் சாட்சியமளித்தார்.

அத்துடன், முக்கொலை குற்றவாளியினை எதிர்வரும் ஜூலை மாதம் 11-ம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஜோய் மகிழ்மகாதேவா, உத்தர விட்டார்.

அச்சுவேலி கதிரிப்பாயில் கடந்த மே 4-ம் திகதி இடம்பெற்ற முக்கொலை தொடர்பான வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தினால் நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.06.2013 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 11.08.2014 லிருந்து காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | --- |
| நெல்லியடி | --- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,

(C-7760)

பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532

## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

கைகொடுக்கும் நண்பர்கள்
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(C-7745)

## தவறவிடப்பட்டுள்ளது

அல்வாய் வடக்கு J/400 பிரிவைச் சேர்ந்த புவனேஸ்வரன் நவீனன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை அல்வாய் நாவலடிச் சந்தி வழி பருத்தித்துறை பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் "புவனம்" அல்வாய் வடக்கு அல்வாய் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

அடையாள அட்டை இல. : 841902998 V

தொடர்புகளுக்கு: 0774130743

(C-7763)

# மாணவன் படுகாயம்



(யாழ்ப்பாணம்) பாடசாலையொன்றின் முன்றலில் சக மாணவர் ஒருவரின் தாக்குதலில் படுகாயமடைந்த யாழ். அரியாலை மாம்பழம் சந்தியைச் சேர்ந்த பி.ஹரிதாஸ் (வயது 16) நேற்று யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த மாணவனுக்கும் மற்றைய மாணவனுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில், பாடசாலை முடிவடைந்த பின்னர் மற்றைய மாணவன் இரும்புக்கம்பியால் மேற்படி மாணவனை தாக்கியுள்ளான்.

இது தொடர்பில் விரிவான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## விண்ணப்பமுடிவுத் திகதி மாற்றம்

### முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா கற்கைநெறி - 2014/2015

*புதிய பிரிவு ஆரம்பம்*

மேற்படி விடயம் தொடர்பாக நேற்றைய பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள விண்ணப்ப முடிவுத்திகதியை 30.07.2014 எனக் கொள்ளவும்.

மேலதிக தகவல்களுக்கு 0212217092 தொடர்பு கொள்ளவும்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

கடந்த 31.05.2014 சனிக்கிழமை அன்று சிவபதம்
அடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் **இராசலிங்கம் சிவபாக்கியம்**
அவர்களின்



அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.06.2014) சனிக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் (30.06.2014) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(6968)

169/6, 2-ம் ஒழுங்கை
அரசடி, நல்லூர்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 28 - 08 - 1948



இறப்பு 28 - 06 - 2012

### கனகேந்திரம் அன்னலிங்கம்

28.06.2014 திதி

குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்பின்
இருப்பிடமாய் நற்பண்புகளுடன் நல்
வாழ்வுக்கு வழிகாட்டி எமக்காகவே
வாழ்ந்த என் அன்புத் தெய்வமே
உங்கள் நினைவுகளுடன்
என்றும் வாழுகின்றோம்.

82/8, 3ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(6972)

இங்ஙனம் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சுந்தரம் குணராசா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் குணராசா 25.06.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் சிவபாக்கியம் தம்பதியினரின் மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ரவீந்திரதாசன், கீதாராணி (ஜேர்மனி), வசுந்தரா தேவி (ஆசிரியை-யாழ்/பெரியபுலம் ம.வி), வள்ளுவன் (நோர்வே), வாசுகி (ஆசிரியை-செங்குந்தா இந்துக் கல்லூரி), செங்குட்டுவன் (VDF, மாருதி றெடிமெற்ஸ்), நக்கீரன் (யாழ். போதனா வைத்தியசாலை), ஆனந்தசெந்தூரன் (எதிர் காலப் பசுமை உலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மநாகபூசணி, பரமானந்தன் (ஜேர்மனி), அம்பிகைபாலன் (பாலசாயி), சாயீஸ்வரி (நோர்வே), சுதாகரன், றேமளா, நிரஞ்சினி, நளாயினி (ஆசிரியை-யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் குந்தவி, மயூரன், மதுமதி, ராம், அபிராமி, சங்கீர்த்தனன், பிரகதீசன், நந்திதா, ஆதித்தியா, சாருகேசன், கவி சாயினி, ஜனனி, சுருதி, கேதாரநாத், லஷ்சுமிநாத், சாம்பவி, சாய்பிரியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (27.06.2014) நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"செந்தூரகம்"
தாளையடி வீதி, திருநெல்வேலி.

(இ)

தகவல்-குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10.11.1937

மறைவு 09.07.2013

அமரர் **தில்லையம்பலம் இராசலிங்கம்**

நிஜம் ஒன்று நிழலாகி
ஆண்டொன்று ஆனதுவோ
வாழ்ந்தது போதுமென்றோ
இடைவழியில் விண்ணுலகம்
சென்று விட்டீர்.

*உங்கள் ஆத்மா*
*சாந்தியடைய இறைவனை*
*பிரார்த்திக்கின்றோம்.*
*.::ஓம் சாந்தி::.*

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

(இ)

- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளுத்கம அழிவுகளை இராணுவம் புனரமைக்கும் பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

பேருவளை, அளுத்கம ஆகிய பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதலின் போது ஏற்பட்ட அழிவுகளை இராணுவம் புனர்நிர்மாணம் செய்யும் என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

படையினரின் இலவச ஊழிய வளத்தைப் பயன்படுத்தியே இப் பிரதேசத்தில் சேதமடைந்த கட்டடங்கள் மீள் நிர்மாணிக்கப்படும்.

மஹிந்த ராஜபக்ஷ மாலைதீவுக்கு புறப்பட முன்னர் இந்தப் பணிப்புரையை விடுத்ததாகவும் கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அளுத்கம பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தேசத்தை நேசிக்கும் எவரும் மற்ற இனங்களை தாக்கவோ அடிமைப்படுத்தவோ மாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)


## UNIVERSITY OF JAFFNA - SRILANKA

**Vacancies - Faculty of Arts**

University of Jaffna will entertain application up to 11th July 2014 from suitably qualified persons for the under mentioned posts.

**Temporary Lecturer / Temporary Tutor**

Archaeogy / Christian Civilization / Drama & Theatre Arts / Economics/ English Literature / Fine Arts / Geography / Hindu Civilization / Hindu Philosophy / History / Law / Linguistics /Media Studies / Planning /Political Science / Psychology/ Sanskirt / Sociology / Tamil / Translation Studies

**Temporary Lecturer / Instructor**

Art & Design / Dance (Bharathanatiyam / Kathakali) / Music (Vocal / Violin) / English Language Teaching / Home Economics

Note : Candiates awaiting the results of the final degree examinations may also apply for Tutor / Instructor

Salary : Temporary Lecturer Rs.26,020/- per month fixed
Temporary Tutor / Instructor Rs.21,370/- per month fixed

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registar / Academic Establishments, University of Jaffna, SriLanka either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn-in favour of the Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelope 23x10 cm in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the Univesity website should attach a Money Order / Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Applications for the above posts should be sent to the Senior Assistant Registrar / Academic Establishments, University of Jaffna.

Applications from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

Registrar
2014.06.27

c7758


# சங்காபிஷேகமும் ஆச்சார்யாபிஷேகமும்

இருபாலை கிழக்கு அருள்மிகு லிங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் மேற்படி ஆலய அர்ச்சகர் பா.கேசவன் ஐயரின் ஆச்சார்யாபிஷேகம் (குருப்பட்டம்) காலை 6.45 மணிமுதல் 7.15 மணிவரையுள்ள சுபநேரத்தில் ஆலய மண்ட பத்தில் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும் இடம் பெறும். (2)




## இணுவில் கந்தசுவாமி கோவில்

புனராவர்த்தன அஷ்டபந்தன உத்தமோ உத்தம
(33 குண்டம்) மகா கும்பாபிஷேகப் பெருவிழா

**காலம்**

ஆனித்திங்கள் 20 ஆம் நாள் (04:07:2014) வெள்ளிக்கிழமை
சுபமுகூர்த்தம் முற்பகல் 8:40 முதல் 10:27 வரை

**கிரியைகள் ஆரம்பம்**

இன்று 28:06:2014 சனிக்கிழமை அதிகாலை 5:41

**எண்ணெய்க் காப்பு**

01:07:2014 செவ்வாய்க்கிழமை காலை 8:30 தொடக்கம் புதன்கிழமை (02:07:2014) மாலை 4:00 மணிவரை அடியார்கள் அனைவரும் இப் பெருவிழாவில் பங்கு கொண்டு எம் பெருமானுடைய இஷ்ட சித்திகளை பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

28:06.2014 சுபம் இங்ஙனம்
தர்மகர்த்தா சபையினர்.

விளம்பர
அனுசரணை
கண்ணா களஞ்சியம்
K.K.S. வீதி,
கோண்டாவில்.

GANESAN CENTRE
K.K.S. Road, Inuvil,
Dealers in Textiles and
Fancy Goods
T.P-060 221 2293

(6970)


# இராசி பலன்

**28.06.2014**

**(ஆனி 14, சனிக்கிழமை)**

சூரிய உதயம். காலை 5.58 மணிக்கு
பிரதமை பிற்பகல் 3.18 மணிவரை
திருவாதிரை காலை 6.41 மணிவரை
இராகுகாலம்-8.55-10.25 மணிவரை
சுபநேரம்-2.55-4.25 மணிவரை

வளவன்

**மேடம்** — தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், பிரயாணங்களால் பலனுண்டு, உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**இடபம்** — வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் நாள், வருமானம் திருப்தி தரும், புதிய முயற்சி ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வார்த்தைகளில் நிதானம் தேவை.

**மிதுனம்** — நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் கூடும்.

**கடகம்** — அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், அடுத்தடுத்த செயல்களால் திணறுவீர்கள், விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாள்வது நல்லது.

**சிம்மம்** — சிறப்பான நாள், அந்நிய தேச தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கன்னி** — தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், புதிய திட்டங்கள்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**துலாம்** — விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** — குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது, உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள், பிரயாண பயமுண்டு, ஒரு செயலை முடிக்க அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு** — அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** — தேவைகள் பூர்த்தியாகும் நாள், பழைய பிரச்சினைகளைத் தீர்க்க முழு மூச்சுடன் செயற்படுவீர்கள், கடன் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்ப்பீர்கள், கௌரவமான நாள்.

**கும்பம்** — பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமைப்படுவீர்கள், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** — தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், வாகன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் லயன்ஸ் கழக பணிப்பாளர் சபை பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் 2014/2015 ஆம் ஆண்டுக்குரிய புதிய பணிப்பாளர் சபை பதவியேற்பு எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக கேட்போர் கூடத்தில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தலைவரும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு லயன்ஸ் கழகங்களின் 2 ஆவது மாவட்டத்தலைவர் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா, லயன் சீமாட்டி ரஞ்சி தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

புதிய சபையின் பதவியேற்பில், தலைவராக மானிப்பாய் இலங்கை வங்கியின் முகாமையாளர் லயன் பொன்.பாலகுமார், செயலாளராக வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன், பொருளாளராக தொழிலதிபர் லயன் ந.சண்முகவேல், முதலாவது உப தலைவராக ஹெல்திலங்கா நிறுவனத்தின் மாகாண இணைப்பாளர் லயன் ஆர்.சிவநாயகம், இரண்டாவது உபதலைவராக சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் லயன் சி.குமாரவேல், மூன்றாவது உபதலைவராக மக்கள் வங்கி உத்தியோகத்தர் லயன் என்.தயாரூபன், அங்கத்துவ இணைப்பாளராக ஓய்வுநிலை பிரதேச செயலரும் வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் த.தேவராஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் லயன் த.சித்தார்த்தன், ஓய்வுநிலை சமூகசேவை உத்தியோகத்தர் லயன் வை.யோகானந்தராஜா, வைத்திய கலாநிதி லயன் எஸ்.பேரின்பநாயகம், சமூக சேவகரும் சமாதான நீதவானுமாகிய லயன் செ.மகாதேவா, லயன்சீமாட்டி ம.பூமாதேவி, சட்டத்தரணி எஸ்.வி.சிவஞானம், சட்டத்தரணி பொ.சுந்தரலிங்கம், தீவகம் பிரதேச சபை முகாமை உதவியாளர் லயன் எல்.ஜுட்சி ஆகியோரும் பதவியேற்கவுள்ளனர். (2)



நன்றி:மிரர்

# குழை போட்டு கணவாய் பிடிப்பதால் கடற்றொழிலாளர்கள் பாதிப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பு காட்டு குழைகளால் நிறைந்துள்ளதாக அப் பிரதேச கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கணவாய் பிடிப்பதற்காக குறித்த பிரதேசத்தில் சில கடற்றொழிலாளர்கள் காட்டுக் குழைகளை கடலில் போட்டு கணவாய் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்

இதனால் பாரம்பரிய வலைகளை கொண்டு கடற்றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள்பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஏனெனில் கடலுக்கு அடியில் மண் நிரப்பப்பட்ட பைகள் குழைகளுடன் கட்டப்பட்டுள்ளதால் கடலுக்குள் குழைகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

பாரம்பரியமாக வலைகளை மேற்கொண்டு கடற்றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் மீன் பிடிப்பதற்காக வலைகளை கடலில் வீசும் போது கடல் நீரோட்டம் காரணமாக ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு வலைகள் இழுத்து செல்லப்படுகின்றது.

இதன்போது நிலையாக நிற்கும் கணவாய் குழைகளுடன் வலைகள் சிக்குண்டு கிழிகின்றன.

இந்த நிலையில் கடற்றொழிலாளர்களின் வேண்டுகோளை அடுத்து கிராம மட்ட கடற்றொழிலாளர் அமைப் புக்கள் மற்றும் வடமராட்சி கடற்றொழில் சங்கத்தின் சமாச நிர்வா கம் அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி குழுக்கூட்டம் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட பல கூட்டங்களிலும் குழைபோட்டு கணவாய் பிடிப்பதை தடைசெய்யுமாறு கோரி தீர்மானம் நிறைவேற்றியது.

ஆனால் இற்றைவரைக்கும் எந்தவொருதீர்மாணங்களும்நடைமுறைப் படுத்தப்படவில்லை.

தொடர்ச்சியாக கணவாய் பிடிக்க குழை போடப்பட்டுவருகிறது. இதனால் பாரம்பரியமாக வலைகளை பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் நாளாந்தம் பெரும் நட்டத்தை எதிர்நோக்கி உள் ளனர்.

எனவே இக் கடற்பரப்பில் குழை போட்டு கணவாய் பிடிக்கும் நடவடிக்கை முற்று முழுதாக நிறுத்தப்படுமா? என வடமராட்சி கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் அரச அதிகாரிகளிடம் கேள்வி எழுப்புகின்றனர். (2-64)

# அந்தோனியார் ஆலய திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய திருவிழா திருப் பலி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

திருப்பலியைத் தொடர்ந்து புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி இடம்பெறும். (2)




# வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் கால்நடைகளுக்கு அடையாளமிடல்

(கோப்பாய்)

விலங்குகள் சட்டத்திற்கமைய வலி.கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அனைத்து மாடுகளுக்கும் காதில் அடையாளமிடுதல் தொடர்பான நடவடிக்கை,ஜுலை மாதத்திலிருந்து ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளாக கோப்பாய் கால்நடை வைத்திய அலுவலக உத்தியோகத்தர்கள் மூலமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்போது மாடுகளுக்கு காதில் இலக்கமிடுதல் மற்றும் விலங்கு உறுதிச் சீட்டுகள் வழங்கப்படுதலும் ஏற்கனவே இலக்கமிடப்பட்ட மாடுகளின் இலக்கங்கள் சீர் செய்யப்படுதலும் இலக்கமிடப்படாத மாடுகளுக்கு புதிதாக இலக்கமிடுதலும் இடம் பெறும்.மாடுகளுக்கு உரித்தை உறுதிப்படுத்தல், மாடுகள் திருடப்படுவதை தடைசெய்தல், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார நடவடிக்கைகளின் போது மாடுகளை அடையாளம் காணுதல், மாடுகளின் புள்ளி விபரமொன்றை பேணுதல் என்பனவற்றுக்காகவே மாடுகளுக்கு காதில் அடையாளமிடப்படுகின்றது.

சட்டத்திற்கமைய அடையாளமிடப்படாத மாடுகளுக்கு விலங்குகள் சட்டத்திற்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி வைத்தியர் பிரபாகரன் தெரிவித்தார். (அ)

# நினைவுக் கூட்டம்

முற்போக்கு ஜனநாயக தேசியவாதியும் இடதுசாரி ஆதரவு நிலைப் பாட்டாளரும் முன்னாள் கம்பஹா பாராளுமன்ற உறுப்பினருமான மறைந்த தோழர் எஸ்.டி.பண்டாரநாயக்காவின் நினைவுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் முதலாவது மாடியில் சட்டத்தரணி சோ.தேவராஜா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு நினைவுரையினை பு.ஜ.மா.லெ.கட்சின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், யாழ்.பல்கலைக்கழக மொழியியல் துறை விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன், தேசிய கலை இலக்கிய பேரவையைச் சார்ந்த க.தணிகாசலம், பு.ஜ. மா.லெ.கட்சியைச் சேர்ந்த எஸ்.ஜீ. கணேசவேல் மற்றும் கா.செல்வம் கதிர்காமநாதன் ஆகியோர் வழங்குவார்கள். (2)

# மின்சாரம் தடை

உயர் அழுத்த, தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை தோப்பு, அச்சுவேலி, செல்வநாயகபுரம், தம்பாலை, இடைக்காடு, பத்தமேனி, தெல்லிப்பழை சந்தை வீதி, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை நவிண்டில், பொலிகண்டி, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, இமையாணன், உடுப்பிட்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, கம்பர்மலை, உடுப்பிட்டி சனசமூக நிலையத்தடி, பொக்கணை, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பரா கல்லூரியடி, நவிண்டில் வி.சி, வல்லை, கொன்வென்ட், குருநகர், பாசையூர், பண்ணை, முத்தமிழ்வீதி, பண்ணை, வில்லூன்றி, பழைய பூங்கா வீதியின் ஒரு பகுதி, மடம் வீதி ஆகிய இடங்களிலும்

மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (எ)

# திடீர் தீ விபத்தினால் இரு வீடுகள் எரிந்து நாசம்

## குருநகரில் நேற்று மாலை சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர்ப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற தீவிபத்தில் இரண்டு வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

மற்றொரு வீடு பகுதியாக எரிந்து சேதமடைந்துள்ளது. குருநகர் பாங்ஷால் வீதியில் குடிமனைகள் நெருக்கமாக உள்ள பகுதியில் இத்தீவிபத்து இடம்பெற்றுள்ளது.

இத் தீ விபத்தில் இரு வீடுகள் முற்றாக எரிந்து சேதமாகியுள்ளன. அருகில் இருந்து மற்றொரு வீட்டுக்கும் தீ பரவி அது பகுதியாக எரிந்த நிலையில் அணைக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபை தீயணைப்புப் பிரிவினரும் படையினரும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். இத் தீ விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை.

# விரைவு தபால் சேவை யாழில் துரித வளர்ச்சி

## பிரதி அஞ்சல்மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அஞ்சல் திணைக் களத்தினால் 2013ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட விரைவு தபால் சேவை வட மாகாணத்தில் துரித வளர்ச்சி கண்டுள்ளதாக வட மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் என்.இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

மேற்படி துரித தபால் சேவையினை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணத்தில் இரண்டு வாகனங்கள் சேவையில் உள்ளதுடன், அவை பருத்தித்துறைப் பகுதியில் இருந்து யாழ்.நகரம் முழுவதும் துரிதமாக தபால்களைச் சேகரித்து 24 மணி நேரத்திற்குள் ஒப்படைக்கப்படவேண்டிய இடத்தில் ஒப்படைத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டர்.

20 கிராம் கொண்ட தபால் பொதியொன்றிற்கு 65 ரூபா கட்டணமாக அறவிடப்படுவதாகவும் இந்த சேவையினை வட மாகாண மக்கள் உரிய முறையில் பயன்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (எ-11)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மைய றோட்டறக் கழகத்தால் கடந்த மாதங்களில் விளையாட்டுப் பெருவிழா மற்றும் பொது அறிவு நுண்அறிவு தேடல் பரீட்சை போன்றவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும். (ஏ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## VACANCIES
## VAVUNIYA CAMPUS, UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

University of Jaffna will entertain applications upto **08.08.2014** from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF APPLIED SCIENCE**
**Department of Bio science**
Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in **Environmental Science**

**Note :**
preference will be given to those who have specialization at postgraduate level in **/ Doctoral degree in Environmental Science / Wild life Conservation / Waste Management / Ecotourism / Oceanography** for the post of Senior Lecturer Grade I / II

**Department of Physical Science**
Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in **Applied Mathematics and Computing / Information & Communication Technology**
**Instructor (female) in Physical Education Grade II**

**SALARY AND OTHER BENEFITS**

| POST | SALARY SCALE |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs.45,545-7x1050-52,895/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.39,755-11x790-48,445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27,775-10x645-34,225/-p.m |
| Instructor in physical education Grade II | Rs.24,930-19x360-31,770/-p.m |

**Note:**
In addition to the above salary, the following allowances will also be paid for academic staff:
Academic allowance - Senior Lecturer Gr.I / Gr.II - 85% of the basic salary
Lecturer (Probationary) - 65% of the basic salary
Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.
The following allowance will also be paid for permanent post
Special allowance - 20% of the basic salary
Cost of living allowance of Rs.7, 800 /- p.m

**Statutory benefits:**
Sabbatical leave entitlement for the holder of the post of senior Lecturer Gr.II and above.
Membership in Universities Provident fund and Pension Scheme in the University system.
Gratuity payments.
Employees' Trust Fund benefits.
Free Medical Services.

Applications for the above posts shall be sent to the Deputy Registrar / Academic Establishments, University of Jaffna, Thirunelvely Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar / Academic Establishments, University of Jaffna, Srilanka, either in person or by post, on a payment of Rs.100 /- per application form. Those who wish to obtain applicatiion forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23 x 10 c.m in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms down loaded from the University website should attach a Money Order / Postal Order for Rs.100 /- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than** one post should apply in **separate forms.**

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

*REGISTRAR,*
*UNIVERSITY OF JAFFNA,*
*SRI LANKA.*
*27.06.2014.*

# மூடப்பட்டது ரஜரட்டை பல்கலைக்கழகம்

(கொழும்பு)

விரிவுரையாளர்களின் பாதுகாப்பு கருதி ரஜரட்டை பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பு பல்கலைக்கழக துணைவேந்தரால் நேற்றுக் காலை விடுக்கப்பட்டுள்ளது. 28 மாணவர்கள் விரிவுரைகளில் இருந்து தடுக்கப்பட்டமையை ஆட்சேபித்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தமது கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் அவர் நேற்று முன்தினம் காலை முதல் விரிவுரையாளர்களை நிர்வாக கட்டடத்துக்குள் தடுத்து வைத்து நேற்று விடுவித்தனர்.

இதனையடுத்தே விரிவுரையாளர்களின் பாதுகாப்பு கருதி பல்கலைக்கழகம் மூடப்படுவதாக துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழக பிரதேசத்தில் கலகம் அடக்கும் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)




அன்பு வாசகர்களே!
நயினை நாகபூஷணி அம்மன் பாமாலைக்கு
உங்கள் ஆக்கங்களை
பிரதம ஆசிரியர்
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815, 021 567 1532


### கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 23.75<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Dip. in Travels / Travel Consultant (அபுதாபி)<br>தொ.இ: B/1536 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: 54.5 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/2182 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: 13<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Management (UK – PR)<br>தொ.இ: B/1537 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 27 சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்<br>தொ.இ: G/2183 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 29<br>தகைமை/தொழில்: O/L / வீடியோகடை உரிமையாளர்<br>தொ.இ: B/1540 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 12 சூரி செவ் 11 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BIT பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/2184 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 19.25<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: வியாபாரம் (UK – Citizen)<br>தொ.இ: B/1541 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 31.25<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்: BA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/2188 |


கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு சமயத்தவரையும் மதித்து மற்றவர்களுக்காக வாழப்பழக வேண்டும்

## மன்னார் மறை மாவட்ட ஆயர் தெரிவிப்பு

(கொழும்பு)

அன்பே கடவுள் என்று எல்லா மதங்களும் எமக்கு கற்றுத்தரும் இந்தவேளையில் ஊண் இயல்புகளுக்கு அடிமையாகாது மனித நேயத்தை மதித்து வாழ வேண்டும். மக்களை வாழவைக்க வேண்டும் என்று உதித்த சமயங்கள் இன்று மக்களை துன்புறுத்தி இன்பம் காண்பதாலும் இதன்மூலம் தாங்கள வளர்ச்சி காணத்துடிப்பதாலும் ஒவ் வொருவரும் அமைதி இழந்து காணப படுகின்றனர் என மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் பொது விளையாட்டு மைதான முன்றிலில் அண்மையில் தென்பகுதியிலுள்ள அளுத்கம, பேருவளை, தர்கா நகர் போன்ற இடங்களில் முஸ்லிம் மக்கள் மீது கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் வன் செயலைக் கண்டித்து இவர்களுக்கான சர்வமத பிரார்த்தனை இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கிறிஸ்தவம், முஸ்லிம், இந்து, பௌத்தம் மற்றும் திருச்சபையை சாராத கிறிஸ்தவ மதத்தலைவர்களின் சர்வமத பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

இதைத்தொடர்ந்து மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தொடர்ந்து உரையாற்றுகையில்,

தற்பொழுது நாட்டில் நிலவும் இந்த விரோத செயல்கள் நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். இங்கு இருக்கின்ற எல்லா இனங்களும் ஒரு மனப்பட்டு நல்ல சிந்தனையுடன் வாழ வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையுடன் வாழ்க்கை முறையை கண்டுகொள்ள வேண்டும்.

பேருவளைப் பகுதியில் கொல்லப்பட்டவர்கள் உற்றார், உறவினர்களுக்காக அனுதாபப்படுகின்ற இந்த நேரத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் எம் மத்தியில் சமய வாதிகளை கொல்வதற்கு எடுத்திருக்கும் முயற்சிகளுடன் இதற்குமேல் இனி என்ன இருக்கின்றது என்பது எமக்குத் தெரியாது.


சமயம் என்றால் என்ன? எல்லா சமயங்களுக்கும் பொதுவாக இருப்பது என்னவென்ற உண்மையை தெரிந்து கொண்டு வெவ்வேறு சமயங்களினூடாக இறைவன் மக்களை தம்மிடம் வரும்படி அழைத்துள்ளார்.

நாம் கடவுளை கண்டதில்லை. ஆனால் ஒருவர் மற்றவர் மீது அன்பு கொண்டிருந்தால் கடவுள் நம் மத்தியில் இருக்கின்றார். இது தான் எமக்கு வழங்கப்பட்டிருக்கும் படிப்பினைகள். இந்த அடிப்படையில் தான் மற்றறைவைகள் சொல்லப்படுகிறன. இதனால்தான் ஒவ்வொரு சமயமும் இவற்றை ஆணி வேராக கொண்டுள்ளது. இவ்வாறான அன்பு எல்லா மதங்களிலும் மலர வேண்டும். அதைவிடுத்து கலவரங்கள் நிகழ்கின்றபோது இறைவனை நோக்கி செபிக்காது, மனித மாண்பை மதிக்காது இருக்காது இறைவனை நோக்கி குரல் கொடுக்கவே இந்நாள் எமக்கு அறைகூவல் விடுக்கின்றது. அன்பு இல்லையேல் அங்கு அமைதி இருக்காது. சண்டையும் சச்சரவும் தான் உருவெடுத்திருக்கும். அன்பு செய்யும் சக்தியை இறைவன் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கின்றார்.

கடவுள் மனிதனுக்காக எல்லாவற்றையும் படைத்த பின் நல்லது எனக் கண்டு மனிதன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என விரும்பினார். ஆனால் மனிதரின் பாவம் கீழ்படியாமை தானே. சட்டத்தை உருவாக்கி தான்தோன்றித்தனமாக வாழ்வதாலேயே இன்று தீமை பெருகிக் கொண்டு வருகிறது.

ஆகவே எல்லா சமயத்த வரும் ஒவ்வொரு சமயத்தவரையும் மதித்து வாழ பழகிக்கொள்ள வேண்டும்.

உடலுக்கு உணவு எப்படி அவசியமோ இதேபோன்று அன்பு எமது வாழ்வுக்கு ஓர் உணவாக அமைய வேண்டும். எமது வாழ்க்கை மிருக வாழ்க்கையாக இருக்கக் கூடாது. மற்றவர்களுக்காக நாம் வாழ கற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (2)



நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை பொலிஸ் பொறுப்பதிகாரி கங்கார தலைமையில் இடம்பெற்ற பொலிஸ் அணி வகுப்பில் காங்கேசன்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி தமயந்தி விஜயசிறி மேற்பார்வையிட்டதை படத்தில் காணலாம்.


(படம்:-கரணவாய் செய்தியாளர்)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 130 | 100 |
| உருளைக்கிழங்கு | 90-110 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 450 |
| தக்காளி | 200 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 140 | 140 | 160 |
| கரட் | 200 | 200 | 200 |
| பூசணி | 100 | 80 | 80 |
| புடோல் | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 60-120 | 80 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 90 |
| பாகற்காய் | 220 | 180 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 140 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 100 |
| பயற்றங்காய் | 90-120 | 160 | 100 |
| லீக்ஸ் | 70 | 100 | 100 |
| பீற்றூட் | 70 | 120 | 100 |
| கறிமிளகாய் | 240 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 90-130 | 180 | 160 |
| போஞ்சி | 170 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 100 | 80 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 80-120 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 10-40 | 40 | 25-30 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 |





ஷாமினி ஜோச்





கனி கனிமொழி



அஜந் குலசிங்கம்





சஞ்சீவ் ரோக்




டிஜ்சாந்தி உதயகுமார்




சுபா கீதன்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதே மேற்கு நாடுகளின் நோக்கம்

## அமைச்சர் விதாரண தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே மேற்கு நாடுகள் மனிதவுரிமை விவகாரத்தை கையில் எடுத்து செயற்பட்டு வருகின்றன. நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக நாடுகள் தனிப்பட்ட ரீதியிலும் கூட்டாகவும் இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கும் அபாயமும் உள்ளது என்று அமைச்சரும் முன்னாள் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

மேற்கு நாடுகளுக்கு இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் மீது எவ்வாறான அன்பும் இல்லை என்பதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புரிந்துகொள்ள வேண்டும்.

வெளிநாடுகளின் தலையீடுகள் ஒருகாலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதனையும் அந்தக் கட்சி உணர வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தமக்குத் தேவையான பொம்மை அரசாங்கத்தை அமைப்பதே மேற்கு நாடுகளின் நோக்கமாகவுள்ளது. ஈராக், ஆப்கானிஸ்தான், லிபியா போன்ற நடுகளில்இந்த செயற்பாட்டையே சர்வதேச சமூகம் மேற்கொண்டது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகளின் விசாரணைக் குழு மற்றும் விசாரணை செயற்பாடுகள் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் விசாரணை செயற்பாடுகளை வலிமையற்றதாக்கவேண்டுமானால்· நாம் உள்ளக ரீதியில் ஒரு செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும். அதனை செய்வதன் மூலமே சர்வதேச முயற்சிகளை தோற்கடிக்க முடியும்.

குறிப்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அனைத்துக் கட்சிகளும் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வில் அமைந்த அரசியல் தீர்வு ஒன்றுக்கு நாடு செல்லவேண்டும்.

இதனை செய்வதன் மூலமே சர்வதேச அழுத்தங்களிலிருந்து நாங்கள் விடுபடலாம்.

எவ்வாறெனினும் இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்றை கொண்டு வருவதே சர்வதேச சமூகத்தின் நோக்கமாகவுள்ளது. தமக்குத் தேவையான பொம்மை அரசாங்கத்தை அமைப்பதே மேற்கு நாடுகளின் நோக்கமாகவுள்ளது. அதற்கேற்ற வகையிலேயே சர்வதேச சமூகம் காய்நகர்த்தல்களை முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக இந்த நிலைமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும்.

ஈராக், ஆப்கானிஸ்தான், மற்றும் லிபியா போன்ற நாடுகளில் இந்த செயற்பாட்டையே சர்வதேச சமூகம் மேற்கொண்டது. அவ்வாறான நிலையை இலங்கையில் உருவாக்குவதே சர்வதேசத்தின் நோக்கமாகும்.

நாட்டில் உள்ள மக்கள் தொடர்பில் மேற்கு நாடுகளுக்கு எவ்வித மான அக்கறையும் இல்லை.

சர்வதேசத்துக்கு இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் மீது எவ்வாறான அன்பும் இல்லை என்பதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புரிந்துகொள்ளவேண்டும். வெளிநாடுகளின் தலையீடுகள் ஒருகாலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதனையும் அந்தக் கட்சி உணர வேண்டும்.

நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக நாடுகள் தனிப்பட்ட ரீதியிலும் கூட்டாகவும் இலங்கை மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கும் அபாயம் உள்ளது என்றார். (அ-2)

# ஐ.நா. விசாரணைக்குழுவின் விசாரணைகளை நிறுத்த முடியாது

## சஜித் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் சர்வதேச சமூகத்தை எதிரியாக்கிக் கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

சர்வதேச சமூகத்தை எதிரியாக்கிக் கொண்டதன் மூலம் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது.

ஆளும் கட்சி அமைச்சர்கள் மேடைகளில் வீராவேசமாக பேசும் பேச்சுக்களுக்கு தொடர்ந்தும் கரகோசம் எழுப்பி உற்சாகமளிக்க மக்கள் தயாரில்லை.

அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடும்போக்குவாதத்தை இல்லாதொழிக்க வேண்டும் எனவும், சர்வதேச சதித்திட்டங்களை முறியடிக்க வேண்டுமெனவும் மேடைகளில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழு விசாரணைகளை நடத்தவுள்ளது. விசாரணைக்குழுவினை நாட்டுக்குள் அனுமதிப்பதில்லை என நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும், விசாரணைக் குழுவின் விசாரணைகளை நிறுத்த முடியாது.

அரசாங்கம் அமைச்சர்களை தர்ம தூதர்களாக்கி நாடு முழுவதிலும் அனுப்பி வைத்துள்ளது.

அண்மைய வன்முறைகளில் உயிர், உடைமை மற்றும் உள ரீதியான பாதிப்புக்களை எதிர்நோக்கியவர்களுக்கு எவ்வாறு ஆறுதல் கூறுவது.

பாரிய சேதம் விளைவிக்கப்பட்டதன் பின்னர் பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு ஆற்றுப்படுத்துவது.

ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள அரசாங்கம் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றது.

மக்களுக்கு பொய் வாக்குறுதிகளை அளித்து அரசாங்கம் செய்வதறியாது செயற்பட்டு வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### தம்பையா சண்முகலிங்கம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சண்முகலிங்கம்(இளைப்பாறிய உப அதிபர் இணுவில் மத்திய கல்லூரி) நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி தாமோதரம்பிள்ளை செல்லம்மா



யாழ்.வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம் பிள்ளை செல்லம்மா கடந்த 25 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் முள்ளி ஐயங்கண்டல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### ஜோர்ஜ் இம்மனுவேல்

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோர்ஜ் இம்மனுவேல் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி ஜுலை மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு St marys Catholic Church, 70 Wellesley Rd, Croydon, Surrey CRO 2AR, United Kingdom என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி வீரசிங்கம் மேரிகேத்தரின்



கொழும்பைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் மேரிகேத்தரின் கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஹேகித்த ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் ஹேகித்த கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### மரியாம்பிள்ளை நீக்கிலஸ் கனகரட்ணம்

ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை நீக்கிலஸ் கனகரட்ணம் கடந்த 25 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 3 மணிக்கு புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### குணரத்தினம் சற்சொரூபன்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் சற்சொரூபன் (முன்னாள் கணனி போதனாசிரியர்) கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஜேர்மனி Schillerstr,60,· 72800 Eningen என்னும் முகவரியில் நடைபெறும்.



### சுப்பிரமணியம் தற்பரன்

மடத்தடி, அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தற்பரன் கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பயிற்றோலை அச்சுவேலி தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### சுந்தரம் குணராசா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் குணராசா கடந்த 25 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லருள் புரியும் நயினை ஸ்ரீநாகபூஷணி



சர்வமத சந்நிதியாக அருள் பாலிக்கும் அன்னை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் வருடாந்த உற்சவம் இன்று சனிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அன்னை பராசக்தி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பதி நயினையம் பதியாகும்.

அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்றாள் அன்னை. சப்ததீவுகளில் ஒன்றாய்ப் புகழ் பூத்து நிற்பது நயினையம் பதியாகும். ஏழ்கடல் சூழ்ந்த சமுத்திரத்தின் மத்தியில் அருள் பொலிவும், ஆன்மீகச் சிறப்பும் பெற்றுச் சரித்திர வரலாறுகளுடன் திகழ்வது நயினாதீவு மணி பல்லவம் எனப் போற் றப்படும் வரலாற்றுச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் இதற்குண்டு. அறுபத்து நான்கு சக்திபீடங்களுடன் ஒன்றான புவனேஸ்வரி பீடம் என்று அழைக்கப்படுவதும் அன்னையின் ஆலயமாகும்.

ஓம் சக்தி எனக் கடல் அலைகள் துதிபாட உதயசூரியனின் வெண் பொற்கதிர்கள் கோபுரத்தின் மீது படர்ந்து பளிச்சென ஒளி வீச நயினையில் அருளாட்சி செய்து வருகின்றார் அன்னை.

அன்னையவளின் ஆலயம் கிழக்கு நோக்கிய 108 அடி உயரமான கோபுரத்தை உடையதான இயற்கைத் தத்துவத்தை வலியுறுத்தி நிற்கின்றது. அடியவர்கள் "அரோகரா" என்று வந்து கால் பதிக்கின்ற இறங்குதுறை "நயினையும் பதிக்கே இயற்கையால் கொடுக்கப்பட்ட நற்றவத் தோற்றமாகும்.

அடியவர்களின் துன்ப, துயரங்களையெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்திட அருள் பாலிக்கும் அன்னை நாகபூஷணி, நாகராணியாக, நாகாச்சியாக எழுந்தருளியிருந்து அடியார்களின் நாக தோஷத்தை நிவர்த்தி செய்து புத்திர பாக்கியத்தையும் கொடுத்து அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

நற்பேறு அடைந்த அடியார்கள் அநேகர் தன்னை வந்து தரிசிக்கும்படி அடியார்களுக்கு கனவிலும் நனவிலும் நாகபாம்பாகத் தோன்றி அவர்களைத் தன்வசம் ஈர்க்கின்ற அம்பாளின் அற்புதங்களைக் காணலாம்.

அம்பாளின் அதிசயங்கள்ள விபரிக்க முடியாது.

இவ்வாலயத்தைப் பற்றிய சரித்திரக் கதைகள் சான்றுகள் பலவாறு உள்ளன. இவற்றுள் ஒன்றினை நோக்குவோம். நாகம் பூசித்தமையால் நாகேஸ்வரி என்ற பெயர் அமைந்தது என்பதும் சான்றோர்கள் கருத்தாகும்.

நயினாதீவுக்கு வடக்கேயுள்ள புளியந்தீவிலிருந்து நாகம் ஒன்று ஒவ்வொருநாளும் பூக்கள் கொண்டு வந்து நயினாதீவில் அம்பிகையை வழிபட்டு வந்தது. ஒருநாள் பூக்கள் கொண்டுவரும் வழியில் ஒரு கருடன் அதனை வழிமறித்து அதனைக் கொல்வதற்கு முயன்றது.

நாகம் பயந்து கடல் நடுவில் இரு ந்த கல்லொன்றில் சுற்றிக் கொண்டது. கருடனோ விலகிப் போகாமல் மற்றொரு கல்லில் அமர்ந்து கொண்டது. நாகத்தைக் கொல்ல சந்தர்ப்பத்தைப் பார்த்துக்கொண் டிருந்தது.

கடல்வழியாகப் பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்த வணிகன் ஒருவன் இக்காட்சியைக் கண்டான். அவன் பாம்பின் மீது இரக்கங்கொண்டு அதனைக் கொல்ல வேண்டாம் எனக் கருடனை வேண்டினான்.

அதற்கு கருடன் நீ உன்னிடம் இருக்கும் செல்வம் அத்தனையையும் கொண்டுவந்து நாகேஸ்வரிக்கு கோயில் அமைப்பாயானால் நான் நாகத்தைக் கொல்லாது சென்று விடுகின்றேன் என்றது.

வணிகனும் சம்மதித்து உறுதியளிக்க அது நாகத்தைக் கொல்லாது விலகிச் சென்றது. வணிகன் தன் நாடு சென்று நடந்தவற்றைத் தன் மனைவிக்குச் சொன்னான்.

இருவரும் இரவில் நித்திரைக்குச் செல்லும்போது கணவன் மனைவி இருவரது கண்களையும் கூசவைக்கும் பேரொளி அறையில் தோன்றியது. விலை மதிக்கற்கரிய நாகரெத்தினக் கல்லில் இருந்து தோன்றிய ஒளி என்பதை அறிந்து கொண்டார்கள். நாகேஸ்வரியின் நல்லருளை வியந்து நயினாதீவுக்கு வந்து அழகியதோர் ஆலயம் அமைத்தார்கள்.

இக்கதைக்குச்சான்றாக ஆலயத்தில் வடகடலில் இரண்டு கற்கள் இப்பொழுதும் காணப்படுகின்றன. அவையிரண்டும் **பாம்புசுற்றியகல், கருடனிருந்த கல்** என்ற பெயர்கள் அழைக் கப்பட்டு வருகின்றன. அடியா ர்கள் இக்கற்கள் இரண்டினையும் வழிபட்டு வருகின்றனர்.

ஆண்டு தோறும் ஆனி மாதம் பிறந்து விட்டால் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுடைய உற்சவ நினைப்பு உலகெங்கிலும் உள்ள சைவ நன் மக்களுக்கு வந்துவிடும்.

உற்சவ காலங்களில் அம்மன் வீதிகள் எங்கும் விழாக்கோலம் பூண்டு புனித நகராக காட்சி தரும். அது மட்டுமல்லாது தாய்மாரும் இளையோரும் உற்சவ காலங்களில் ஆனந்த மேலீட்டினால் நாகமாகவே வளைந்து வளைந்து ஆடிஆடி அசைந்து உருண்டு பிரண்டு புரண்டெழுந்து அன்னையைத் துதிப்பதும் பாடுவதும் ஆடுவதும் நாம் இன்று காணக் கூடிய அருங் காட்சியாகும்.

கருட பூசையின் போது ஆகாயத்தில் வட்டமிடும் கருடனைக் காணும் பக்தர்களது மெய்ப்பாடு மிகவும் உணர்ச்சி பூர்வமானது. கண்ணீரை சொரிய வைப்பது மயிர் கூச்செறிவது, விபரிக்க முடியாதது.

அமுத சுரபி அன்னதான சபையின் புனித பணி 1960 ஆம் ஆண்டு மஹோற்சவத்துடன் ஆரம்பித்து இன்று 54 ஆம் ஆண்டு அன்னதானப் பணி நடைபெறுகின்றது.

அமுதசுரபியை அட்சய பாத்திரமாக்கி கொண்டு அருள் சுரக்கும் அன்னை ஸ்ரீ நாகபூஷணியின் திருவருள் துணை நிற்க பிராத்திப்போம்.

**நயினை நா.க.குமாரசூரியர் (ஜே.பி)**

# இனங்களுக்கிடையில் நம்பிக்கை கட்டியெழுப்பப்படவேண்டும்-நாமல்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல இனங்களுக்கிடையிலும் நம்பிக்கையை கட்டியெழுப்புவது காலத்தின் தேவையாகும். இதன்மூலம் இளைஞர்கள் மத்தியில் நல்ல சிந்தனைகளை வளர்க்க முடியுமென்று அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாகம்புர சர்வதேச பேரவை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 'இனங்களுக்கிடையில் நட்புறவை கட்டியெழுப்பும் விசுவாசம்' நிகழ்வை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர் ந்து கருத்து தெரிவிக்கையில்,

இவ்வாறான நிகழ்வினூடாக இளைஞர்கள் மத்தியில் நல்ல சிந்தனைகளை வளர்த்தெடுத்து நாட்டின் சமாதானத்திற்கு பங்கு செய்யக்கூடியவர்களாக அவர்களை உருவாக்குவது காலத்தின் தேவையாகும்.

எமது நாடு பெற்ற சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு இன, மத, மொழி. பேதமின்றி நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற வகையில் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் பல சமயங்களை பின்பற்றினாலும் அவரவர் சமயங்களுக்கு மதிப்பளித்து ஏனைய சமயங்களினையும் மதிக்க வேண்டும். இதன் மூலம் அவர்களிடையே நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும்.

எதிர்காலத்தில் இந்த திட்டத்தினை நாடு பூராகவும் முன்னெடுத்துச் சென்று நாட்டிலுள்ள சகல இனத்தவர்களிடையேயும் விசுவாசத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



அன்பு வாசகர்களே!

இன்று வரவேண்டிய மகரராசி நாளை வெளிவரும். (ஆ-ர்)




## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று கொடியேற்றம்

### கொடியேற்றி விடிவொன்று தமிழருக்கு தா தாயே...

அலைகடல்நடுவினிலேவீற்றிருந்துஅருள்பாலிக்கும் தாயே!
அடியவர்கள் குறைஅனைத்தும் போக்கும் தாயே!.. உன்
கொடியேற்றம் காண அலைகடல்தாண்டிவந்தோம்தாயே !
கொடியேற்றி, விடிவொன்று தமிழருக்கு தா தாயே!

**நயினைக் கவிஞர் வி.இராசநாயகம்**

### ஏறுக கொடியே ஏற்றம் தரவே!

மங்கல இசை விண்ணதிர
மக்கள் இசை பண்ணென வழங்க
நாததுந்துபி நானிலம் பரவ
ஏதமில் அந்தணர் ஆரணம் ஓத
பக்தர் விழிகள் பன்னீர் தூவ
உத்தமர் கரங்கள் தலைமேல் உயர
சித்தரும் வந்து தியானம் செய்ய
ஏறுக கொடியே ஏற்றம் தர(வே)

**திருமதி.ஜெ.கந்தவேள்,**
**கொக்குவில் கிழக்கு.**

### ஆதி சிவன் தேவி நாகபூஷணியே கொடியேறிவா

அலைகடல் மத்தியில் அமர்ந்து
அடியார்களுக்கு
அருளாட்சி செய்யும் தேவியே-
கொடியேறிவா
அரும் பெரும் சோதியே புவனேஸ்வரி
அம்மையே
ஆதி அந்தம் அற்றவளே-கொடியேறிவா
அருமறைகள் போற்றித் துதித்திடும்
ஆதார சக்தியே அர்த்த நாதீஸ்வரியே-
கொடியேறிவா
அஞ்ஞானம் அகற்றி மெய்ஞ்ஞானம்
தந்தருளும்
ஆதி சிவன் தேவி நாகபூஷணியே
கொடியேறிவா

**சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம்**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

21.06.2014
07.01.2016



# கும்பம்





**அவிட்டம்3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**அஷ்டம ஸ்தானம் வரும் ராகு! அமைதியைக் கொடுப்பது ஆலயமே! தங்களை யாரும் குறை கூறிவிடக் கூடாது என்ற எண்ணம் கொண்ட கும்ப இராசி நேயர்களே!**

பண பலத்தால் மற்றவர்கள் சாதிக்க முடியாத காரியத்தை நீங்கள் பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் மூலம் சாதித்துக் காட்டுவீர்கள். எடுத்த முடிவுகளை அடிக்கடி மாற்றுவதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை. அத்தியாவசிய தேவை என்றால் மட்டுமே அறைக்குள் சென்று பணத்தை எடுத்து வருவீர்கள்.

உங்களுக்கு முட்டுக்கட்டையாக இருப்பதெல்லாம் முன்கோபம்தான். திட்டம் தீட்டுவதில் வல்லவர்கள்தான் என்றாலும், தீட்டிய திட்டங்களை செயற்படுத்துவதற்குள் பின்வாங்கிவிடுவீர்கள். சலனமும் சந்தேகமும் உங்களுக்கு உடன்பிறப்பாகும்.

அத்தனை தகவல்களையும் அறிந்து வைத்துக்கொண்டிருந்தாலும் மனப்பயம் இருக்கும். மற்றவர்களின் புகழ்ச்சிக்கு மயங்கும் நீங்கள் பிறரை விமர்சிக்கும் குணம் பெற்றிருப்பீர்கள். ஆலய வழிபாட்டில் நீங்கள் ஆர்வம் காட்டும்போதுதான் கோள்களின் சுழற்சி உங்கள் வாழ்வின் வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறது என்பதை அனுபவத்தில் அறிந்து கொள்வீர்கள். இப்படிப்பட்ட குணாதிசயங்களைக்கொண்ட உங்களுக்கு இந்த ராகு -கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களையெல்லாம் கொடுக்கப்போகிறது என்பதைப் பற்றி பார்ப்போம்.

**அலைச்சலை அதிகரிக்க வைக்கும் அஷ்டமத்து ராகு! ஆலய வழிபாட்டால் பலன் கொடுக்கும் தனஸ்தான கேது!**

இதுவரை துலாம் ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மேட ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வெளிப் பயணத்தில் 21.06.2014 அன்று பின்னோக்கி வந்து உங்கள் வாழ்க்கையில் பெருவாரியான மாற்றங்களை வழங்கப் போகிறார். ராகு சுய பலமற்ற கிரகம். அவை யார் சாரத்தில் சார்ந்திருக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் பலன்கள் வந்து சேரும். குறிப்பாக இன்னும் ஒன்றரை ஆண்டுகளுக்கு 8இல் தான் ராகு வாசம் செய்யப்போகிறார். எனவே தீட்டிய திட்டங்கள் திசைமாறி செல்லாமல் இருக்க, உங்கள் சுய ஜாதகத்தில் ராகு இருக்கும் நிலையறிந்து அதற்குரிய ஸ்தலங்களை தேர்ந்தெடுத்து யோகபலம் பெற்ற நாளில் சென்று சர்ப்ப சாந்தி பரிகாரங்களை செய்து வந்தால் ஒப்பற்ற வாழ்க்கைக்கு உத்திரவாதம் கிடைக்கும்.

கோச்சார ரீதியாகவும், ராகு-கேதுக்கள் எந்த நட்சத்திரக்காலில் சஞ்சரிக்கிறார்களோ அந்த நட்சத்திரத்திற்குரிய கிரகம் எது என்று ஆராய்ந்து அதற்குரிய ஆதிபத்தியத்தின் அடிப்படையிலும் பலன் வந்து சேரும். ஆனால் வாக்கு, தனம், குடும்பம் என்று வர்ணிக்கப்படும் 2ஆம் இடத்து கேது சஞ்சரிக்கும் போது குடும்பத்தில் நிம்மதி குறையலாம். தன விரயங்கள் தவிர்க்க முடியாததாக இருக்கும். தன்னம்பிக்கை மட்டும் இருந்தால் ஓரளவாவது வெற்றி கிட்டும். 8 இல் வரும் ராகு எப்படிப்பட்ட விரயத்தை கொடுக்கப்போகிறாரோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம். நல்ல விரயமாக நாமாக மாற்றிக்கொண்டால் உள்ளம் மகிழுமல்லவா? சம்பாத்தியம் வந்த மறு நிமிடமே செலவாகிவிடும் என்பதால், அன்பு நண்பர்களின் ஆதரவைப் பெற்று, இல்லம் கட்டி குடியேறும் முயற்சியில் ஈடுபாடு செலுத்தலாம். வீட்டை விலைக்கு வாங்கலாம். கட்டிய வீட்டை பழுதுபார்க்கலாம். காரியத்தை தொடங்கினால் காசு பணம் தானே வந்து சேரும்.

உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது என்பதால், உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊர் மாற்றச் சிந்தனை வரலாம். அரசு பணியில் இருப்பவர்கள் அதிக தூரத்திற்கு செல்லும் வாய்ப்புவரும். ஜாதக பலன் நன்றாக இருந்தால், இருக்கும் இடத்திலேயே இருக்கலாம். இல்லையேல் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பதன் மூலம் குறைபாடுகளிலிருந்து விடுபட இயலும். கொடுக்கல், வாங்கல்களில் விரயங்களை சந்திக்காது இருக்க கூட்டாளிகளை நம்பிக்கைக்குரியவர்களாக சேர்த்துக்கொள்ளுங்கள்.

**என்ன செய்யும் இரண்டாமிடத்து கேது?**

8இல் ராகு சஞ்சரிக்கும் அதே நேரத்தில் வாக்கு, தனம், குடும்பம் என்று வர்ணிக்கப்படும் 2ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பார். வாக்கு கொடுக்கும் முன் ஒருகணம் யோசிப்பது நல்லது. கொடுக்கல்- வாங்கல்களில் பிறருக்கு பொறுப்பு சொல்வதை தவிர்ப்பது நல்லது. குடும்பசுமை கூடும். கோபத்தை குறைத்துக்கொண்டு குணத்தோடு செயற்படுவதன்மூலம் குழப்பங்களிலிருந்து விடுபட இயலும். குடும்ப உறுப்பினர்களிடம் விட்டுக் கொடுத்து செல்வதுதான் நல்லது.

பழைய வாகனங்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும். அப்படி வாங்கும் பொழுது அதிர்ஷ்ட எண் ஆதிக்கத்தில் வாகன எண் அமைந்தால் யோகம்தான். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துக்கொள்ளுங்கள். 2இல் கேது சஞ்சரிக்கும் பொழுது குருவின் பார்வை அதன் மீது பதிவதால் மலைபோல் வந்ததுயர் பனிபோல் விலகும்.

குண்டூசி அளவுள்ள ஒரு சொல்லை, யானை அளவாக மிகைப்படுத்தி பார்ப்பீர்கள். குடும்பத்தில் குழப்பம் உருவாகும். எனவே ஞானகாரகன் கேதுவை பூஜிப்பதோடு அதற்குரிய தெய்வமாக விளங்கும் ஆனைமுகனையும் அவசியம் வழிபாடு செய்ய வேண்டும். விரயம் ஒரு தொடர்கதையாக இல்லாமல் இருக்க வரவு அறிந்து செலவு செய்யுங்கள். வருமான பெருக்கத்திற்கு மாற்று இனத்தவர்கள் ஒத்துழைப்பு தருவர்.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

8ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகு இனிய வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கவும், 2ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேது திரண்ட செல்வத்தை வழங்கவும் சனிக்கிழமை தோறும் விஷ்ணுவையும், லக்குமியையும் வழிபட்டு வாருங்கள். யோக பலம்பெற்ற நாளில் பாம்பு படுக்கையில் படுத்திருக்கும் பரந்தாமனையும், ஸ்ரீதேவியையும், ஆஞ்சநேயரையும் வழிபட்டு வளங்களையும், நலங்களையும் வரவழைத்துக்கொள்ளுங்கள்.

**பாதசாரப்படி ராகு-கேது தரும் பலன்கள்!**

**ராகு செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும பொழுது (21.6.2014 முதல் 24.10.2014 வரை)**

உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசுபவர்கள் உங்களை விட்டு விலகுவர். மகிழ்ச்சி இல்லத்தில் குடிகொள்ளும். கூட்டு முயற்சி லாபம் தரும்.

**ராகு சந்திரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது: (25.10.2014 முதல் 01.07.2015 வரை)**

மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். மாற்றுக் கருத்துடையோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பணப்புழக்கம் குறையும். எதிரிகளின் பலம் அறிந்து செயற்படுவது நல்லது. தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை.

**ராகு சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது: (02.07.2015 முதல் 07.01.2016 வரை)**

வரன்கள் வாயில் தேடி வந்து சேரும். வருமான திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டார பழக்க வழக்கம் விரிவடையும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். அன்னிய தேசத் தொடர்பு அனுகூலம் தரும் விதத்தில் அமையும்.

**கேது புதன் காலில் சஞ்சரிக்கும் பொழுது (21.6.2014 முதல் 25.2.2015 வரை)**

பிள்ளைகள் வழியில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதியோ, உத்தியோக நலன் கருதியோ ஏதேனும் ஏற்பாடுகள் செய்திருந்தால் அதில் வெற்றி கிடைக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும்.

**கேது சனி சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது: (26.2.2015 முதல் 4.11.2015 வரை)**

விரயங்கள் அதிகமாகவே இருக்கும். வீட்டுத் தேவைகள் கடைசி நேரத்தில்தான் பூர்த்தியாகும். பிடிவாத குணத்தை தளர்த்திக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும். உத்தியோகத்தில் வரும் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

**கேது குரு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது: (05.11.2015 முதல் 07.01.2016 வரை)**

பொற்காலமாகும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். தனலாபாதியான குருவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது தனவரவு தாராளமாக வந்து சேரும். நட்பு வட்டம் விரியும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். வைத்துள்ள தொழிலை விரிவுபடுத்தி வளர்ச்சி காண்பீர்கள். சொத்து சேர்க்கையும் சொந்தங்களின் பாராட்டும் அதிகரிக்கும் நேரமிது.

**சனி, குரு மாற்றங்கள் தரும் பலன்கள**

16.12.2014இல் விருச்சிக ராசியில் சனி சஞ்சரிக்கப்போகிறார். உங்கள் ராசிக்கு பத்தாம் இடமாக விருச்சிகம் விளங்குவதால் முத்தான தொழில் வாய்க்கும். முக்கிய புள்ளிகள் உங்கள் இல்லம் தேடி வந்து ஆலோசனை கூறுவர். வருமானம் போதுமானதாக இருக்கும். வங்கி சேமிப்பு உயரும். மூடிக்கிடந்த தொழிலுக்கு திறப்பு விழா காண்பீர்கள். பத்தாம் இடம் கர்ம ஸ்தானம் என்பதால் பெற்றோர்களின் உடல்நிலை யில் கவனம் தேவை. ஆரோக்கிய குறைபாடு தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது.

**குருப் பெயர்ச்சி**

ராகு-கேது பெயர்ச்சிக்கு ஒரு வாரம முன்னதாகவே குரு பெயர்ச்சியாகிவிட்டது. கடகத்தில் உச்சம் பெற்ற குரு, இரண்டாம் இடத்தையும் 12ஆம் இடத்தையும் பார்க்கிறார். எனவே பண வரவு திருப்திகரமாக இருக்கும். அதற்கேற்ப விரயங்களும் வந்து சேரும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கொடுக்கல்-வாங்கல் ஒழுங்காகும். மண மாலை சூடுகிற வாய்ப்பு உருவாகும்.

05.07.2015 இல் சிம்ம ராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். தன லாபாதிபதி உங்களை பார்க்கும் நேரம் ஒரு பொன்னான நேரமாகும். மன மாற்றங்கள் ஏற்படும், மகிழ்ச்சி அதிகரிக்கும். இனத்தார் பகை மாறும். இல்லத்தில் நல்ல சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். பணத் தேவைகள் பூர்த்தியாகும். பக்கத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

நாளை மகரம்.....

**ஜோதிடக் கலைமணி -சிவல்புரி சிங்காரம்-**

அஷ்டம ஸ்தானம் வரும் ராகு! அமைதியைக் கொடுப்பது ஆலயமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்.மீது சர்வதேச விசாரணை இடம்பெற இடமளிக்க மாட்டோம்

## ஜாதிக ஹெல உறுமய உறுதிபட தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு எந்த விசாரணைக்குழுவை நியமித்தாலும் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். சிங்கள மக்களின் விருப்பத்தை பாராளு மன்றத்தின் மூலமாக வெளிப்படுத்தி விட்டோம். உள்ளக விசாரணைகள் சுயாதீனமாக இடம் பெறுகின்றன என ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.**



இலங்கை மீதான விசாரணைகளை மேற்கொள்ள ஐ.நா.விசாரணைக்குழு மூன்று நிபுணர்களை நியமித்துள்ள நிலையில் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நவநீதம்பிள்ளை கோரிக்கை விடுத்துள்ளமை தொடர்பில் கருத்துரைக்கையிலேயே ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினரும் மேல் மாகாண அமைச்சருமான உதய கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை மீதான சர்வதேச விசாரணையொன்று இடம்பெறுவதற்கு ஒருபோதும் இடமளிக்க போவதில்லை என்பதை அரசாங்கம் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டு விட்டது. இந்நிலையில் இலங்கை மீதான விசாரணைகளை மேற்கொள்ளும் முயற்சியில் ஐ.நா. விசாரணைக்குழு செயற்பட்டு வருகின்றது.

யார் எவ்வாறான விசாரணைக்குழுக்களை நியமித்தாலும் இலங்கை மீதான சர்வதேச தலையீட்டிற்கு ஒருபோதும் இடமில்லை. இந்த நாட்டை சீரழிக்கும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நாம் இடமளிக்கமாட்டோம்.

இலங்கையில் சிங்கள மக்களின் விருப்பம் என்னவென்பது பாராளுமன்றில் கொண்டு வரப்பட்ட பிரேரணையினை நிறைவேற்றியதன் மூலமாக வெளிப்பட்டு விட்டது.

ஒருசில பிரிவினைவாத அமைப்புக்களும் சர்வதேசத்திடம் எமது நாட்டைக் காட்டிக்கொடுக்கும் தேசத்துரோகிகளையும் தவிர ஏனைய அனைவரும் சர்வதேச விசாரணைக்கு எதிர்ப்பினையே தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் சர்வதேச விசாரணைக்குழுவொன்று இலங்கைக்குள் வருவதை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

மேலும் யுத்தத்தில் 40 ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை. யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றுள்ளதா என்பதற்கும் காணாமற் போனோர் தொடர்பில் கண்டறிவதற்கும் இலங்கையில் சுயாதீன விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

எமது நாட்டிலும் பக்கச்சார்பற்ற வகையில் விசாரணைகள் இடம் பெறுகின்றன. எனவே, அதற்கு எவ்வித தடைகளும் இன்றி ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

இங்கு அரசியல் நடத்தும் கட்சிகள் உள்ளக விசாரணையினை ஆதரித்து நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும். அதை விடுத்து சர்வதேச விசாரணைகளுக்கு ஆதரவு வழங்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# ஆயுதங்களை ஒப்படைக்க 28 வரை காலக்கெடு

அளுத்கம பொலிஸ் பிரிவில் மறைத்து வைக்கப்பட்டுள்ள குண்டுகள், கத்தி, துப்பாக்கி, இரும்புத் தடி, அடங்கலான சகல ஆயுதங்களையும் இன்று கையளிக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் ஒலிபெருக்கி மூலம் அளுத்கம முழுவதும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அளுத்கம பொலிஸிற்கோ, பொதுவான மைதானமொன்றிற்கோ குறித்த திகதிக்கு முன்னர் ஆயுதங்களை கையளிப்பவர்களுக்கு எதிராக எதுவித சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது. கையளிக்கப்படாவிடின் அவற்றை கைப்பற்றுவதற்கு பாரிய தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதிக்குப் பின்னர் ஆயுதங்கள் வைத்திருக்கும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

அளுத்கம மற்றும் பேருவளை பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் உயிரிழப்புக்களும் சொத்து சேதங்களும் ஏற்பட்டது தெரிந்ததே.(அ-2)

# இரு இந்தியர்கள் கைதானார்கள்

(கொழும்பு)

சட்டவிரோதமாக துணி விற்பனையில் ஈடுபட்ட இரு இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எல்ல-தெமோதர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு குறித்த சந்தேகநபர்கள் கைதானதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்கள் சுற்றுலா விசா மூலம் இலங்கைக்கு வந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களை பண்டாரவளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# புகலிடக் கோரிக்கையாளர்களை கையாள்வதற்கு புதிய சட்டமூலம்

## அவுஸ்திரேலியா சமர்ப்பித்தது

அவுஸ்திரேலியாவில் புகலிடக் கோரிக்கைகளை சமர்ப்பிப்பவர்களின் விண்ணப்பங்களை கையாளுகின்ற விதத்தை மாற்றியமைக்கக் கூடிய புதிய சட்டமூலத்தை அந்நாட்டு அரசாங்கம் சமர்ப்பித்துள்ளது.

புலம்பெயர்வு சட்டத்தின் மீதான திருத்தங்களின் பிரகாரம், புகலிடக் கோரிக்கையாளர்களை வேறு நாடுகளுக்கு அனுப்புவது இலகுவாகுமென அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திருத்தங்களின் பிரகாரம், தமக்கு பாதுகாப்புக் கோரி நிற்கும் புகலிடக் கோரிக்கையாளர்கள் அதற்குரிய ஆவணங்களை விரைவாக சமர்ப்பிப்பது கட்டாயமானதாக மாறுகிறதென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர்வு சட்டத்தின் மீதான திருத்தங்கள் அங்கீகரிக்கப்படுமானால், தமது கோரிக்கைகள் நியாயமானவை என நிரூபிப்பது புகலிடக் கோரிக்கையாளரின் பொறுப்பாக இருக்கும்.

அத்துடன், ஒரு புகலிடக் கோரிக்கையாளர் தமது அடையாளத்தை நிரூபிக்க முடியாத அல்லது நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் அவரது பாதுகாப்பு விசா விண்ணப்பம் நிராகரிக்கப்படுமென குடிவரவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறேனும், சொந்த நாடு இல்லாதவர்கள் போன்ற சில புகலிடக் கோரிக்கையாளர்களிடம் உத்தியோகபூர்வ ஆவணங்கள் இருக்கமாட்டாது என்பது உத்தேச திருத்தங்கள் ஊடாக அங்கீகரிக்கப்படும்.

எனினும், சுய அடையாளத்தை நிரூபிக்கும் தலையாய பொறுப்பு புகலிடக் கோரிக்கையாளர் சார்ந்ததாக இருக்குமென அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

அண்மைக்கால நீதிமன்றத் தீர்ப்புக்கள், அதிகப்படியான புகலிடக் கோரிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் உத்தேச திருத்தங்களை முன்மொழிய நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இன்று ஒரு தகவல்

## பூட்டைத் திறக்க வேண்டும்

ஓர் ஊரிலே ஒரு மன்னர் இருந்தார்.

அந்த நாட்டின் நிர்வாகத்தை கவனிப்பதற்கு ஒரு முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது.

எப்படித் தேர்ந்தெடுக்கிறது?

ஏற்கனவே அமைச்சர்களாகப் பலபேர் அங்கே இருந்தார்கள். அவர்களிலே ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அதனால் மன்னர் அவர்களை அவதானித்தபடியே இருந்தார்.

நான்கு பேருக்கு அந்தத் தகுதி இருப்பதை அவர் கண்டார். அவர்களிலே ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எப்படி என்பது தான் பிரச்சினை.

அவர்கள் நான்கு பேருக்கும் பொதுவான ஒரு போட்டி வைக்க வேண்டும். அதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கு முதலமைச்சர் பதவியைக் கொடுக்கலாம் என்று முடிவு செய்தார். என்ன போட்டி வைக்கிறது? மன்னர் யோசித்தார். அதன் பின் ஒரு முடிவுக்கு வந்தார்.

ஒரு நாள் காலையிலே அந்த நான்கு பேரையும் அழைத்து அவர்களிடம் சொன்னார்:

"இதோ பாருங்கள்... என்னிடம் ஒரு பூட்டு இருக்கிறது. அது சாதாரண பூட்டு அல்ல. எண்கணித முறைப்படி வடிவமைக்கப்பட்ட விஞ்ஞானப் பூட்டு. நாளை காலையிலேயே உங்களிடம் அந்தப் பூட்டைப் கொண்டு வந்து கொடுப்பேன், அதன்பின் ஒவ்வொருக்கும் பூட்டைத் திறப்பதற்கு ஒரு வாய்ப்பு தருவேன்.

யார் அந்தப் பூட்டை குறைவான நேரத்திலே திறக்கிறார்களோ அவர் தான் இந்த நாட்டின் முதலமைச்சர்" என்றார் மன்னர்.

அந்த நான்கு பேரும் நிம்மதி இல்லாமல் இரவு பூராகவும் தூங்கவில்லை.

விடிய விடிய பூட்டு தொடர்பான ஓலைச் சுவடிகள் எல்லாவற்றையும் புரட்டிப் புரட்டி பார்த்தார்கள்.

கணிதம் தொடர்பான குறிப்புக்களையெல்லாம் விழுந்து விழுந்து படித்தார்கள்.

அவசரத்தில் படித்ததால் அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை.

முதலமைச்சராக வரவேண்டும் என்ற ஆசையிலே அவர்களால் எதையும் நிதானமாக சிந்திக்க முடியவில்லை.

இந்த நான்கு பேரில் ஒருத்தர் மட்டும்அமைதியாக இருந்தார். அவர் மட்டும் தான் கொஞ்சம் நிம்மதியாக தூங்கினார். மறுநாள் விடிந்தது. அரசசபையிலே மன்னர் வந்து அமர்ந்தார்.

இந்த நான்கு பேரும் வந்து சேர்ந்தார்கள்.

ஒரு பெரிய பிரம்மாண்டமான பூட்டை சேவகர்கள் தூக்கிக் கொண்டு வந்தார்கள். அதை மன்னர் முன் வைத்தார்கள்.

ஓ... இவ்வளவு பெரிய பூட்டா? நான்கு பேரும் ஆச்சரியமாக அதைப் பார்த்தார்கள். எல்லோருடைய படபடப்பும் இன்னும் அதிகமாகியது. ஏதோ பரீட்சைக்குப் படிக்கிற மாதிரி கையிலிருந்த ஓலைச்சுவடி களைக் பார்த்தார்கள்.

அதன்பின்பு பூட்டைப் பார்த்தார்கள். ஏதேதோ முயற்சி செய்து பார்த்தார்கள். எதுவும் சரியாகப் புலப்படவில்லை. தோல்வியை ஒப்புக் கொண்டார்கள்.

கடைசியாக இரவு பூராகவும் தூங்கியவர் பூட்டுக்குப் பக்கத்திலே வந்தார். குனிந்து பார்த்தார்.

என்ன ஆச்சரியம்.

ஏற்கனவே, அந்தப் பூட்டு திறந்தேதான் இருக்கிறது. அது பூட்டப்படவேயில்லை. சாவியும் தேவைப்படவில்லை.

கணிதமும் தேவைப்படவில்லை. அவர் சுலபமாக அந்தப் பூட்டைத் திறந்து விட்டார்.

அவர் தான் முதலமைச்சர் என்று மன்னர் அறிவித்தார். இந்தக் கதையிலேயிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன?...

ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால் அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனம் பதற்றம் அடையக்கூடாது. அமைதியாக இருக்க வேண்டும். நிதானமாக இருக்க வேண்டும்.

ஒரு நிர்வாகம் சிறப்பாகச் செயற்பட இந்தப் பண்புகள் முக்கியமாகத் தேவை. நிர்வாகம் என்பது நாட்டு நிர்வாகம் மட்டும் தான் என்பது இல்லை. குடும்ப நிர்வாகமும் அதில் அடங்கும்.

முதலில் என்ன பிரச்சினை என்பதைப் புரிந்து கொண்டு அதன் பின் அதை எப்படித் தீர்க்கலாம் என்று யோசிக்க வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

82

....“ஓர் கையிலே
பெண்ணும்
ஓர் கையிலே மதுவும்
சேர்ந்திருக்கும் வேளையில் என்
ஜீவன் பிரிந்தால்தான்
நான் வாழ்ந்த வாழ்க்கை
நலமாகும்; இல்லையென்றால்
ஏன்வாழ்ந்தாய். என்றே
இறைவன் எனைக்கேட்பான்”

நீங்களும் நானும் இப்படிச் சொல்ல முடியுமா?

இந்தத் திராணியும், தினவும், தன் நிர்வாணத்தை மறைக்காத நிஜமும் கவியரசு கண்ணதாசனின் விலாசங்கள் சொல்லும் விலாசங்களாயின.

கவிதையின் அத்தர்களை அவர் உரைநடையில் தெளித்துவிட்ட அழகு இருக்கிறதே! அதனால் தமிழ், வாசனை வாக்கியங்களைத் தனக்குள் வரவு வைத்துக்கொண்டது.

அவரது உரைநடையில் ஒவ்வொரு வாக்கியமும் ஒரு பத்தியாய் இருக்கும்.

அப்படிப் பத்தி பிரிக்கும் உத்தி பைபிளிலிருந்து தி.ஜ.ர. கைப்பற்றியது.

தி.ஜ.ரவிடமிருந்து கண்ணதாசன் கைப்பற்றியது.

கண்ணதாசனிடமிருந்து நான் கற்றது.

நிலாவைப் பிடித்து கோலி விளையாடுவது மாதிரி அரிய விடயங்களை அலட்சியமாகச் சொல்வதற்கு அவரை விட்டால் ஆளில்லை.

“பெண்ணை- ஆடைகட்டிப் பார்த்தால் கலை;
நிர்வாணமாய்ப் பார்த்தால் கவிதை;
பிணமாகப் பார்த்தால் தத்துவம்.”




அவர் எச்சில் துப்புவதில் கூடத் தங்கம் தெறித்தது.

“தற்கொலை செய்துகொள்ள விரும்புகிறவன்
தன் கழுத்தில் ஒரு முடிச்சுப் போட்டுக் கொள்கிறான்;
அல்லது
இரண்டு பெண்களின் கழுத்தில் ஆறு முடிச்சுப் போடு கிறான்.”

செரிக்க முடியாத விடயங்களைக் கூடச் சிரிக்க முடிந்தவாறு சொல்லத் தெரிந்தவர் அவர்தான்.

அவர் தாராளமாய் எதிர்த்தவர்; ஏராளமாய் எதிர்க்கப்பட்டவர்.

“சரீரம் கனமாக உள்ளவனுக்குத்தான் மாரடைப்பு திடீரென வருகிறது.

அதிகமான வசதியுள்ளவனுக்குத்தான் ஆரோக்கியம் சீக்கிரம் கெடுகிறது


அளவுகடந்த புகழ் உள்ளவனுக்குத்தான் எதிர்ப்பு அதிகம் வருகிறது.” என்று திட்டவட்டமாய் அவர் தீர்மானம் போட்டிருந்தார்.

அதனால் எதிர்ப்புகளை அவர் எதிர்ப்பதில்லை.

நம் காலத்தில் அதிகமாய்ப் பழித்தவரும் பழிக்கப்பட்டவரும் அவர்தான்.

இரண்டையுமே அவர் பொருட்படுத்தவில்லை.

ஒருமுறை அவரைக் கேட்டார்கள்:



உங்களை நிறையப் பேர் பழிக்கிறார்களே! பதில் சொல்லாமல் இருக்கிறீர்களே?

அதற்கு அவர் பதில் சொன்னார்:
பதிலே ஒரு குட்டிக்கதை.

“சிற்றெறும்புகள் வரிசையாய்ப் போய்க் கொண்டிருந்தன. அந்தப் பக்கம் ஒரு யானை வந்தது. தன் காலடி பட்டால் சிற்றெறும்புக் கூட்டம் சிதைந்துவிடுமே என்று இரக்கப்பட்டு யானை திசை மாற்றி நடந்தது.

உடனே சிற்றெறும்புகள் எல்லாம் ஒன்றாய்க் கூடிச் சிரித்துக்கொண்டன. பார்த்தீர்களா... ‘யானை நம்மைப் பார்த்து பயந்துவிட்டது!”

இந்தக் கதையைச் சொல்லிச் சிரித்த கண்ணதாசன், “நான் யானை; எதிர்ப்புகள் சிற்றெறும்புகள்” என்றார்.

இப்படி ஒரு முடிவெடுப்பதிலும் எனக்கு குருநாதர் அவர்தான்.

(தொடரும்)

-வைரமுத்து-

# யாழ்ப்பாணத்தில் பலர் டெங்கு தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிக்கை

யாழ்.மாவட்டத்தில் பல பகுதிகளிலும் டெங்கு நோய் தீவிரமாக பரவி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதன் காரணமாக இம்மாதம் மட்டும் யாழ். மாவட்டத்தில் 85 நோயாளர்கள் டெங்கு நோயுடன் இனங்காணப்ப ட்டுள்ளனர்.

எனவே இதனைக் கட்டுப்படுத்த சுகாதார திணைக்களத்தால் மட்டும் முடியாது. அதற்கான விழிப்புணர்வு எல்லோர் மத்தியிலும் வேண்டுமென யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் செய்திக் குறிப்பொன்றை விடுத்துள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையின் தென்பகுதி யிலுள்ள பல மாவட்டங்களில் டெங்கு நோய் தீவிரமாக பரவிவருகின்றது. குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயினால் பரம்பல் அதிகமாகக் காணப்படுகின்றது. கொழும்பு மாவட்டத்திற்கு சென்று வந்த யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த பலர் டெங்கு நோய்த்தொற்றிற்கு உள்ளாகியுள்ளனர். இதற்கு மேலதிகமாக தற்போது யாழ்.மாவட்டத்தில் உள்ளூரிலேயே பலர் டெங்கு நோய்த் தொற்றிற்கு உள்ளாவதை தற்போது அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலைகள், பொது அமை ப்புக் கள், பொதுமக்கள் அனைவரது ஒத்துழைப்பும் அவசியமாகவுள்ளது. எனவே. உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுத்து டெங்கு நோயை கட்டுப்படுத்த உதவுமாறு வேண்டுகின்றேன்.

சகல அரச, தனியார் நிறுவனங்கள் பணியாளர்களால் முழுமையாக சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட வேண்டும், பாடசாலைகள் மாணவர்களின் பங்களிப்புடன் சிரமதான அடிப்படையில் பாடசாலை வளவும் சுற்றாடலும் துப்புரவு செய்யப்பட வேண்டும், வர்த்தக நிலையங்கள் உரிமையாளர்களால் துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும், வைத்தியசாலைகள் – உத்தியோகத்தர், ஊழியர்களின் பங்களிப்புடன் துப்புரவு செய்யப்படவேண்டும்.

தனியார் கல்வி நிலையங்கள் உரிமையாளர்களால் துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும், வணக்கத்தலங்கள் சம்பந்தப்பட்ட அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட வேண்டும், தனியார் வீடுகள் உரிமையாளர்களால் குடியிருப்பாளர்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும், பராமரிப்பற்ற வீடுகள், காணிகள் உரிமையாளர்களால்/ பராமரிப்பாளர்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும், பொதுச்சந்தைகள், மயானங்கள் போன்ற பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும், கழிவு நீர் வாய்க்கால்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களாலும் உள்ளூராட்சி மன்றங்களாலும் துப்புரவு செய்யப்பட வேண்டும், பிரதேச மட்டத்தில் டெங்கு கட்டுப்பாடு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் பிரதேச செயலாளர் பிரதேச டெங்கு கட்டுப்பாட்டுக்குழுக் கூட்டத்தை உடனடியாக கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.தற்போது யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரமாக பரவிவரும் நிலையில் காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் பின்வ ரும் ஆலோசனைகளை பின்பற்றவும்.

தற்போதைய சூழ்நிலையில் காய்ச்சல் ஏற்படும் போது இது டெங்கு காய்ச்சலாக இருக்கலாம். எனவே காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் பூரண ஓய்வில் இருக்க வேண்டும். வேலைக்கு செல்பவர்களும் மாணவர்களும் விடுமுறை பெற்று வீட்டில் ஓய்வெடுக்க வேண்டும்.

வீட்டிலும் கடுமையான வேலையேதும் செய்யாது பூரண ஓய்வில் இருக்க வேண்டும்.

பொதுவாக டெங்கு காய்ச்சலின் பின் விளைவுகள் இறப்புக்கள்காய்ச்சல் தணிந்த பின்னரே ஏற்படுவது வழமை. எனவே காய்ச்சல் தணிந்த பின்னரும் இரண்டு நாட்களுக்கு ஓய்வு அவசியம்.

மாணவர்கள் காய்ச்சல் ஏற்படும் காலத்தில் விளையாட்டுகளில் பங்கு பற்றுவதை தவிர்க்க வேண்டும். கடந்த காலங்களில் டெங்கு காய்ச்சலுடன் பரசிற்றமோல் வில்லைகளை போட்டுக் கொண்டு விளையாட்டுக்களில் பங்குபற்றிய இரண்டு மாணவர்கள் அநியாயமாக உயிரிழந்தமையை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

காய்ச்சலின் போது போதிய நீராகாரங்களை அருந்தி உடலின் நீர்த் தன்மை வற்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

சில நோயாளர்கள் பரசிற்ற மோல் வில்லைகளை அளவுக்கு அதிக மாக பாவித்து சுய வைத்தியம்செய் வதனை அவதானிக்க முடிகிறது.

இதனால் ஈரல் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்படலாம்.எனவே காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் சரியான வைத்திய ஆலோசனையின் படி பரசிற்றமோல் வில்லைகளை பாவிக்கவேண்டும். குறிப்பாக குழந்தைகளுக்கு இது மிக மிக அவசியம்.

மேலும் காய்ச்சலுடன் மயக் கம், வயிற்றுவலி, வாந்தி, வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் காணப்படும் நோயாளர்கள் காலந்தாழ்த்தாது உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெறவேண்டும்.

எனவே யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப் படுத்துவதற்கு அனைவரும்ஒன்றிணைந்துமதுபங்களிப்பை வழங்குவோம் என அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தின் வருடாந்த கல்விக்கண்காட்சி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் உள்ளிட்ட விருந்தினர்கள் கண்காட்சியை பார்வை யிடுவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நலனைவிட இலங்கை உறவு பெரிது!

## -பழநெடுமாறன்



புதிய பிரதமர் மோடி அரசின் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்த அணுகுமுறை எவ்வாறு இருக்கப் போகிறது என்பதைக் குறித்து பலவித கருத்துக்கள் பத்திரிகைகளில் வெளியாகின. பா.ஜ.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழக அரசியல் கட்சித் தலைவர்களும் ஈழத்தமிழர் பிரச்சினையை மோடி அரசு விரைவில் தீர்க்கும் என்ற நம்பிக்கையை தேர்தல் நேரத்தில் வெளியிட்டார்கள்.

ஆனால். பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கையில் ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து எவ்விதக் கருத்தும் கூறப்படவில்லை. மேலும் தமிழகத்தில் 6 இற்கும் மேற்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேசிய மோடியின் இப் பிரச்சினை குறித்து எதுவும் பேசவில்லை. பத்திரிகையாளர்கள் கேட்டபோதும் பொதுப்படையாக வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் பிரச்சினை குறித்து தனது அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என தெரிவித்தாரே தவிர, ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிக் குறிப்பாக எதுவும் சொல்லவில்லை.

ஆனால், பிரதமர் பதவியை மோடி ஏற்பதற்கு முதல்நாள் ஆர்.எஸ்.எஸ். இயக்கத் தளபதிகளில் முக்கியமானவரும் பா.ஜ.கவின் தேசிய செயற்குழு உறுப்பினராகவும் இருக்கக்கூடிய சேசுஷாத்திரி சாரி என்பவர் ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து திட்டவட்டமாக தெளிவான கருத்துக்களை வெளியிட்டார்.

இந்தியா- இலங்கையின் உறவு என்பது தமிழர்கள் பிரச்சினையால் பகையாகிவிடக் கூடாது. தமிழர்களின் பிரச்சினைகளில் கொழும்பு உண்மையாகவும் சுமூகமாகவும் தீர்க்கும் என பா.ஜ.க. கருதுகிறது. மேலும் இதற்காக அந்த அரசு முயற்சிப்பதாகவும் நம்புகிறது. இதற்காக இலங்கை அரசுக்கு கால அவகாசம் தருவது அவசியம் என்று கூறியுள்ளார்.

அதாவது இந்தியா- இலங்கை உறவு மிக முக்கியமானது. தமிழர்கள் பிரச்சினையால் அது பகையாகிவிடக்கூடாது என்று கூறியதின் மூலம் தமிழர்கள் பிரச்சினையைவிட இலங்கையின் உறவு முக்கியமானது என்ப தை அழுத்தமாகவும் திருத்தமாகவும் கூறியி ருக்கிறார்.

சிங்களவர் உறவுக்காக ஈழத் தமிழர்களைப் பலிகொடுத்த காங்கிரசின் கொள்கையே பா.ஜ.க. ஆட்சியிலும் தொடரும் என்பதுதான் அவர் கூறியதற்கு அப்பட்டமான பொருளாகும்.

ஜெயவர்த்தனா, பிரேமதாசா, சந்திரிக்கா ஆகியோர் காலங்களில் அதாவது 1987 முதல் 2003 வரை அவகாசம் அளிக்கப்பட்டும் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டும், நோர்வே நாட்டின் மத்தியஸ்தம் மேற்கொள்ளப்பட்டு எடுக்கப்பட்ட முடிவுகளையும் சிங்கள அரசு நிறைவேற்றவில்லை. இந்த வரலாறு முழுவதையும் சேசுஷாத்திரி அறியாமல் இருக்க முடியாது. ஆனாலும் இன்னமும் கால அவகாசம் கொடுக்கச் சொல்கிறார்.

2009 ஆம் ஆண்டு போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்த பின்னும் தமிழர்களின் முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை.

2012 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமை ஆணையம் இப்பிரச்சினையில் தலையிட்டு போரின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்களையும் போர்க் குற்றங்களையும் விசாரித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை அரசுக்கு 3 ஆண்டு கால அவகாசத்தை அளித்தது. அதற்கிணங்க இலங்கை அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக்குழு அளித்த பரிந்துரைகளையும் நிறைவேற்றுவதற்கு மகிந்த ராஜபக்ஷ மறுத்துவிட்டார்.

2013 ஆம் ஆண்டில் மீண்டும் சர்வதேச விசாரணையை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை கோரினார். அதே ஆண்டில் மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா முன்மொழிந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் அதை ஏற்க மகிந்த ராஜபக்ஷ மறுத்துவிட்டார்.

2014 ஆம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் சர்வதேச புலன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த விசாரணைக் குழுவை தங்கள் நாட்டிற்குள் அனுமதிக்க முடியாது என்று மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

கடந்த காலத்தில் நடைபெற்ற இவையத்தனையும் சேசுஷாத்திரி போன்றவர்கள் அறிந்துகொள்ளாமல் இருக்க முடியாது. ஆனாலும் மகிந்த ராஜபக்ஷவுக்கு கால அவகாசம் கொடுக்கச் சொல்கிறார். ஈழத்தமிழர் பிரச்சினையில் உலக நாடுகள் தலையிட்டிருப்பதையும் சேசுஷாத்திரி கண்டித்துள்ளார்.

இந்தியாவின் பிராந்திய நலன்களுக்குட்பட்டது இலங்கை என கருதி உலக நாடுகள் இப்பிரச்சினையிலிருந்து ஒதுங்கியிருந்தன. ஆனால் இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலையை தடுத்து நிறுத்தவோ குறைந்தபட்சம் கண்டிக்கவோ மன்மோகன் சிங் அரசு முன்வராத காரணத்தினால் ஐ.நா. மனித உரிமை ஆணையர் தலையிட வேண்டி நேர்ந்தது. அவரே இலங்கைக்குச் சென்று நேரில் பார்த்து அக்கொடுமைகளை கண்டறிந்து அளித்த அறிக்கையின் அடிப்படையில் ஐ.நா. மனித உரிமை ஆணையம் இதில் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதையே மறைத்துப் பேசுவது நியாயமற்றது.

இலங்கையின் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனை தனது சாட்சிக்கு சேசுஷாத்திரி அழைத்துள்ளார். ஆனால் தன்னுடன் இந்தியாவுக்கு வருமாறு மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை விக்னேஸ்வரன் ஏற்க மறுத்து தனது தலைமையில் உள்ள வடமாகாண அரசுக்கு அதிகாரங்கள் எதுவும் கடந்த 8 மாதங்களாக வழங்கப்படவில்லை. தமிழர்கள் பிரச்சினை எதுவும் தீர்க்கப்படவில்லை என்று கூறி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்தியாவுக்கு வர மறுத்துவிட்டதை சேசுஷாத்திரி சாமர்த்தியமாக மறைத்திருக்கிறார்.

இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுதான் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார். அப்படியானால் பாகிஸ்தானின் ஓர் அங்கமாக இருந்த கிழக்கு வங்க மக்கள் தனி நாடு கோரி போராடியபோது வங்கதேச சுதந்திர அரசை உடனடியாக இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என நாடாளுமன்றத்தில் ஜனசங்கத் தலைவர் ஏ.பி.வாஜ்பாய் பேசியதையும் வங்கதேசத்திற்கு உடனடியாக இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்றும் கூறி டில்லியில் 1971 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி ஜனசங்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியதையும் சேசுஷாத்திரி மறந்து போனாரா? பாகிஸ்தானின் சட்டதிட்டத்திற்கு உட்பட்டுத்தான் கிழக்கு வங்கப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று சேசுஷாத்திரியும் அவர் சார்ந்திருந்த ஜனசங்கமும் அன்று பேசினார்களா? இலங்கையில் பிரிவினையை எதிர்ப்பதாக இன்று கூறுகிற சேசுஷாத்திரி கிழக்குப் பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்தது ஏன்?

சார்க் நாடுகளில் ஒன்றான இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தனது பதவியேற்பு விழாவிற்கு மோடி அழைத்ததில் தவறு இல்லை என்று சேசுஷாத்திரி வாதாடுகிறார்.

இந்தியாவில் வாழும் பிற தேசிய இனங்களைச் சேர்ந்தவர்கள் சார்க் நாடுகளில் இனப் படுகொலைக்கு ஆளாகவில்லை. தமிழ்நாட்டு மக்களோடு தொப்புள்கொடி உறவுகொண்ட மக்கள்தான் இலங்கையில் படுகொலைக்கு ஆளாகியுள்ளார்கள். அதற்குக் காரணமான ராஜபக்ஷவை அழைப்பது பெருந்தவறு என தமிழக மக்கள் கொதிப்புடன் கருதுகிறார்கள். இந்தியாவிலும் பஞ்சாபிலும் ஹரியாணாவிலும் வாழும் பஞ்சாபி மொழி பேசும் மக்கள் மேற்கு பாகிஸ்தானில் வாழ்கிறார்கள். பா.ஜ.கவின் மூத்த தலைவர் அத்வானியின் இனமான சிந்தி இனமக்கள் பாகிஸ்தானில் வாழ்கிறார்கள். பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரில் ஏராளமான காஷ்மீரிகள் வாழ்கிறார்கள். இவர்கள் படுகொலை செய்யப்பட்டால் இந்த இனத்தைச் சேர்ந்த இந்தியாவில் வாழ்பவர்கள் மனம்கொதித்துக் கொந்தளிக்க மாட்டார்களா?

சார்க் அமைப்பில் இலங்கையும் இருப்பதனால், சிங்கள இராணுவத்திற்குப் பயிற்சி இந்தியாவில் அளிக்கப்படுகிறது. ஆயுதம் கொடுக்கப்படுகிறது என அச்செயலை நியாயப்படுத்தி மன்மோகன் சிங் அரசு பேசியது. ஆனால், சார்க் நாடுகளில் ஒன்றான பாகிஸ்தான் இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சியோ ஆயுதமோ கொடுக்கப்படுவதில்லை. ஏனென்றால் அவ்வாறு செய்வது இந்தியாவிற்கு ஆபத்தாகும் என்பதை மன்மோகன் சிங் அரசு உணர்ந்திருந்த காரணத்தினால் அதைச் செய்யவில்லை.

ஆனால் இலங்கை இராணுவத்திற்கு அளிக்கப்படுகிற பயிற்சியும் ஆயுதங்களும் அந்நாட்டில் உள்ள தமிழர்களைக் கொன்று குவிக்க என்பதை உணர்ந்திருந்த காரணத்தினால்தான் வாஜ்பாய் அரசு அவ்வாறு செய்ய மறுத்தது. இலங்கையைச் சுற்றி இந்தியக் கடற்படை காவல்காத்தபோது பா.ஜ.க. அரசில் பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த ஜார்ஜ் பெர்ணாண்டஸ் இந்தியக் கடற்கரையைக் காவல் காப்பதுதான் நமது கடற்படையின் கடமை மற்றொரு நாட்டின் கடற்கரையை காப்பது அல்ல என்று கூறி தமது கடற்படையை திரும்ப அழைத்தார்.

இந்தியா வந்த மகிந்த ராஜபக்ஷ பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இப்பேச்சுவார்த்தையில் 1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை உடன்பாட்டிற்கிணங்க 13 ஆவது சட்டத் திருத்தத்தை முழுமையாகவும் சீக்கிரமாகவும் நிறைவேற்ற வேண்டும்; மாகாண அரசுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் ஆகிய அதிகாரங்களை வழங்க வேண்டும்; தமிழக மீனவர்கள் பிரச்சினை ஆகியவை முக்கிய இடம்பெற்றதாக இந்திய வெளியுறவுச் செயலாளர் அறிவித்திருக்கிறார். இலங்கை அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் 13 ஆவது சட்டத் திருத்தம் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய- இலங்கை உடன்பாட்டில் வடக்கு- கிழக்கு மாகாணங்களை இணைத்து தமிழர்களுக்கு என்று தனியாக ஒரு மாகாணம் அமைக்கப்பட வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க 13 ஆவது சட்டத் திருத்தத்தை இலங்கை அரசு கொண்டு வந்தது. தமிழர்களுக்கு தனியாக ஒரு மாகாணம் தருவதை சீர்குலைப்பதற்காக சின்னஞ் சிறிய நாடான இலங்கையில் சிங்களர் பகுதிகளுக்கென எட்டு மாகாணங்களையும் தமிழர்களுக்கு ஒரு மாகாணத்தையும் உருவாக்கினார்கள். இலங்கையில் மத்திய அரசே சிங்கள அரசாக இருக்கும்போது அவர்களுக்கென்று தனியான எட்டுமாகாணங்கள் தேவையில்லை. தமிழருக்கு அளிக்கப்பட்ட மாகாணத்திற்கு காணி, பொலிஸ், நிதி ஆகிய அதிகாரங்கள் அளிக்கப்படவில்லை. வேண்டு மென்றே தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியை துடைப்பதற்கு ராஜீவ்காந்தியின் காலத்திலிருந்து மன்மோகன் சிங் காலம்வரை காங்கிரஸ் அரசுகள் எதுவும் செய்யவில்லை.

மகிந்த ராஜபக்ஷ குடியரசுத் தலைவரான பிறகு அவரின் மறைமுகத் தூண்டுதலின் பேரில் வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டதை எதிர்த்து இலங்கை உச்சநீதிமன்றத்தில் சிங்கள தீவிரவாத அமைப்பு ஒன்றினால் வழக்குத் தொடுக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் இதற்கான சட்டம் நிறைவேற்றப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி உச்சநீதிமன்றம் இந்த இணைப்பு செல்லாது என்று தீர்ப்பளித்தது. உடனடியாக இதைப் பயன்படுத்திக் கொண்டு மகிந்த ராஜபக்ஷ வடக்கு- கிழக்கு மாகாணங்களைப் பிரித்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் இந்த நடவடிக்கை தவறானது. இந்திய- இலங்கை உடன்பாட்டிற்கு எதிரானது என கண்டிக்கவோ திருத்தவோ மன்மோகன் சிங் அரசு முன்வரவில்லை. இப்போது புதைகுழிக்குப் போய்விட்ட 13 ஆவது சட்டத் திருத்தத்தை நிறைவேற்றச் சொல்லி வற்புறுத்துவது போகாத ஊருக்கு புரியாத வழி காட்டுவதாகும்.

இலங்கையில் தமிழர் பகுதியை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்திருக்கிறது. தமிழர்கள் தங்களின் சொந்த ஊர்களிலிருந்தும் வீடுகளிலிருந்தும் விரட்டியடிக்கப்பட்டு உள்நாட்டிலேயே அகதிகளாக வாழும் அவலம் நீடிக்கிறது. வடக்கு- கிழக்கு மாகாணங்களில் ஏராளமான சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்து திட்டமிட்டு நடத்தப்படுகின்றன. அவர்களின் பாதுகாப்பிற்காக சிங்கள இராணுவ முகாம்களும் அமைக்கப்படுகின்றன.

தமிழ்ப் பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் வாழும் பரிதாபம் நீடிக்கிறது. சிங்கள இராணுவத்தின் பாலியல் வன்முறைக்கு அவர்கள் தொடர்ந்து ஆளாக்கப்படுகிறார்கள். தமிழிளைஞர்கள் காரணமின்றி கைதுசெய்யப்பட்டு காணாமல் போகிறார்கள். இந்த கொடுமைகளை குறித்தும் அவற்றைத் தடுத்து நிறுத்துவது குறித்தும் உறுதியான நடவடிக்கை எடுக்க, மோடியின் அரசு முன்வர வேண்டும். மகிந்த ராஜபக்ஷ அளிக்கும் வெற்று வாக்குறுதிகளை நம்பி செயலற்றுக் கிடந்த மன்மோகன் சிங் அரசைப் போல புதிய அரசு இருக்கக்கூடாது.

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து சேசுஷாத்திரி அளித்த விளக்கத்தை தேர்தலுக்கு முன் அளிக்க தமிழக சாதூரியவான்கள் தடுத்துவிட்டதாக அவர் கூறியிருக்கிறார். அதைப் பார்க்கும்போது பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கையிலும் மோடி பேசிய கூட்டங்களிலும் ஈழத் தமிழர் பிரச்சினை இடம்பெறாமல் போனதற்கும் சேசுஷாத்திரியின் விளக்கத்திற்கும் ஒரே பின்னணி இருப்பது புரிகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

847

# கிணற்றில் ஒரு புலி!



அடர்ந்த காட்டுப் பகுதியில் அவர்கள் மூன்று பேரும் நடந்தனர். முதலில் கையில் டார்ச்சுடன் போகிறானே அவன்தான மாணிக்கம். அவனுக்குப் பின்னால் போவது சந்திரா, அவளது கையைப் பிடித்தபடியே பயத்தோடு நடக்கும் ரவி, சந்திராவின் தம்பி.

காலடியில் காய்ந்த சருகுகள் சரசரவென்று ஒலி எழுப்பின. எங்கோ தொலைவில் ஒரு நரியின் ஊளைச் சத்தம் கேட்டது. "நெசமாவே நீ கேட்டியா மாணிக்கம்?" என்றாள் சந்திரா கண்களை அகல விரித்து.

"ஆமாங்கா, கரும்புத் தோட்டம் பக்கமா சாய்ந்தரம் அஞ்சு மணிக்கு வந்தப்பதான் புலியோட உறுமலைக் கேட்டேன்" என்றான் மாணிக்கம்.

அப்போது இருட்டில் புலியின் உறுமல் கேட்டது. இது வரை இருந்த அசட்டுத் தைரியம் ஓடிப்போய்விட்டது. கையில் இருந்த டார்ச் விழுந்ததுகூடத் தெரியாமல் மாணிக்கம் சிட்டாகப் பறந்தான். சந்திராவும் தம்பியின் கையைப் பிடித்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓடினாள்.

புலியின் உறுமலைப் பற்றிய தகவலை சந்திரா தன் தந்தையிடம் தெரிவித்தாள். "ஏன் தனியாகப் போனீர்கள்?" என்று அவர் கடிந்துகொண்டார். "இரவில் காட்டுக்குள் போவது நல்லதல்ல. காலையில் ஆட்களைச் சேர்த்துக்கொண்டு செல்வோம்" என்றார்.

மறுநாள். வனத் துறைக்குத் தகவல் கொடுத்துவிட்டு, 50இற்கும் மேற்பட்டவர்கள் ஆளுக்கு ஒரு கம்பு, கட்டையுடன் கிளம்பினார்கள். அந்தக் கிராமத்துக்குப் பக்கத்தில் மிகப் பெரிய சரணாலயம் இருக்கிறது. அங்கேயிருந்து சில சமயம் புலி. சிறுத்தை போன்ற விலங்குகள் ஊருக்குள் வருவதுணடு. அப்படித்தான் இந்தப் புலியும் வந்திருக்க வேண்டும்.

"யாரும் புலியை அடிக்காதீங்க. அதைக் கொல்லக்கூடாது. வலைபோட்டுப் பிடிச்சு, சரணாலயத்துல சேர்த்திடலாம்" என்று அவர்களிடம் கண்டிப்பாகச் சொன்னார் சந்திராவின் அப்பா. பயத்தோடும் பெரிதாக ஏதோ நடக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்போடும் ஊரை ஒட்டியிருந்த முள்வேலங்காட்டுக்குள் கூட்டம் சென்றது.

"அதோ தெரியுதே கிணறு... அங்கேதான் உறுமலைக் கேட்டேன்" என்றான் மாணிக்கம்.

"நேத்து நாங்க இந்த இடம் வரைக்கும் வந்தோம்" என்றாள் சந்திரா.

"இருட்டுல புலி இருக்கிற இடத்துக்குத் துணை இல்லாம வரலாமா? இனிமே இப்படி அசட்டுத்தனமாச் செய்யாதீங்க" என்று எல்லோரும் அவர்களைக் கடிந்து கொண்டனர்.

பாழடைந்த கிணற்றை அவர்கள் நெருங்கியபோது. உள்ளேயிருந்து உறுமல் கேட்டது. கைப்பிடி இல்லாத அந்தக கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தனர். குட்டையாகத் தேங்கியிருநத தண்ணீரில், ஒரு சிறிய பாறையின் மீது புலி ஒன்றுபடுத்து இருந்தது. மேலே தலைகள் தெரிவதைப் பார்த்ததும் உறுமியது. சிவந்த வாயும், கூர்மையான பற்களும் அவர்களை குலைநடுங்கவைத்தன.

அதற்குள் வனத்துறையினரும் தீயணைப்புப் படையினரும் வந்து சேர்ந்தனர். கால்நடை மருத்துவர் குழு ஒன்றும் சேர்ந்துகொண்டது. சரணாலயத்துக்கும் தகவல் தரப்பட்டது. கூட்டத்தில் இருந்த ஒருவன் திடீரென்று, "நேத்து ராத்திரி இந்தப் புலி பக்கத்துக் கிராமத்து முனுசாமியோட பசுமாட்டை அடிச்சுக் கொன்னுடுச்சாம்" என்றான்.

இதைக் கேட்ட மாணிக்கமும், சந்திராவும், ரவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். உடனே கூட்டத்தவிட்டு நழுவி, சைக்கிளை எடுத்துக்கொண்டு பக்கத்துக் கிராமத்தை நோக்கி விரைந்தனர்.

முனுசாமியின் வீட்டை அடைந்து, புலியைப் பற்றி விசாரித்தனர். "நேத்து ராத்திரி 10 மணிக்கு அந்தப் புலி இங்கே வந்து கொட்டாயில கட்டியிருந்த பசுவின் கழுத்தைக் கடிச்சு கொன்னுட்டுது" என்று முனுசாமி அழுதார்.

மாணிக்கம் அவரை நம்பாமல் முறைத்தான். சந்திராவின் உள்ளுணர்வு, "இவர் எதையோ மறைக்கிறார்" என்றது. ரவி மெதுவாக தோட்டத்துப் பக்கமாக வந்தான். குப்பைமேட்டில் ஒரு மருந்துப் பாட்டில் கண்களில் பட்டது. அதை எடுத்து காற்சட்டைப் பையில் பத்திரப்படுத்திக்கொண்டான். சிறிது நேரம் பேசிவிட்டு, அவர்கள் கிளம்பினார்கள்.

"அக்கா, இவர் எதையோ மறைக்கிறார். தோட்டத்துல இந்த மருந்துப் பாட்டில் கிடைச்சுது" என்று சொல்லி பாட்டிலை அவளிடம் கொடுத்தான்.

சில நிமிடங்கள் அதைப் பார்த்த சந்திரா, "இது மாடுங்க அதிகமா பால் கறக்கப் போடுற ஊசி மருந்து" என்றாள்.

சற்று நேரத்தில் அவர்கள் புலி இருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கேயிருந்த கால்நடை மருத்துவரை அணுகி, சந்திரா என்னமோ பேசினாள்.

கிணற்றுக்குள் இறங்கி புலியை வெளியே தூக்கும் முயற்சியில் ஆட்கள் ஈடுபட்டார்கள். நான்கு பேர் கிணற்றுக்குள் இறங்கி, வலையை வீசியபோதும் புலி பாயவில்லை. கயிற்றால் கட்டி மேலே இழுத்தார்கள். மருத்துவர் புலிக்கு மருந்து ஒன்றைச் செலுத்தினார்.

"ஆச்சரியமா இருக்கே... புலிக்கு மயக்க ஊசி போடாமலேயே பிடிச்சுட்டீங்க எப்படி?" என்றார் சந்திராவின் அப்பா.

"முனுசாமியைக் கூட்டிட்டு வாங்க... எல்லா விவரமும் தெரியும்" என்றார் கால்நடை மருத்துவர்.

முனுசாமியை அழைத்து வந்து விசாரித்தனர். முதலில் மறுத்தார் முனுசாமி. "புலியை விஷம்வெச்சுக் கொல்ல முயற்சி செய்த குற்றத்துக்காக உன்னைக் கைது செய்யலாம் தெரியுமா?" என்று சொன்னதும் மிரண்டுபோனார்.

"பசுவுக்கு அடிக்கடி அந்த ஊசி மருந்தை நான் போடுவேன். அதனால் பால் நிறையக் கறக்கும். ரெண்டு நாள் முன்னால அப்படி ஊசி போட்டப்ப பசு செத்துப்போச்சு. அதை யாருக்கும் தெரியாமல் ராத்திரியில் புதைக்கிறதுக்காக மாட்டுக்கொட்டாயில் வெச்சிருந்தேன். ராத்திரி அங்கே புலி வந்து மாட்டைக் கடிச்சது. சத்தம் கேட்டு வந்து பார்த்தப்ப ஓடிப்போயிருச்சு. ஊசி மருந்துபோட்டுப் பசுவை சாகடிச்சிட்டதா யாரும் என்னைத் திட்டக்கூடாதுன்னு புலி மேல பழிபோட்டேன். ஆனால, இந்தப் பசங்க உண்மையைக் கண்டுபிடிச்சுட்டாங்க" என்றார் முனுசாமி.

"ஊசிமருந்து பசுவின் உடம்புல ரொம்ப நாளாக் கலந்து விடயமாகி இருக்கு. அதைச் சாப்பிட்ட புலிக்கு விஷம் ஏறி இருக்கு. அதனால்தான் சோர்ந்து இருந்துச்சு. நல்லவேளை, சரியான நேரத்துல சந்திராவும் ரவியும் மருந்து விடயத்தை என்கிட்டச் சொன்னாங்க. நானும் மாத்து ஊசிபோட்டு புலியைக் காப்பாத்திட்டேன்" என்றார் மருத்துவர்.

"உன்னை மாதிரி சில ஆளுங்க அதிகம் பால் கறக்கும்னு மாட்டுக்கு வைத்தியம் பார்க்க ஆரம்பிச்சா இப்படித்தான் உள்ளதும் போயிரும். உன் மேலே வழக்குப் பதிவு பண்ணனும்" என்றார் வனத்துறை அதிகாரி.

சந்தரா, மாணிக்கம் மற்றும் ரவியை எல்லோரும் பாராட்டினர். ஆனா மயக்க நிலையில் இருந்த புலியை சரணாலயத்துக்கு அனுப்ப டிரக்கில் ஏற்றியபோது, அது இவர்களைப் பார்த்த பார்வை நன்றி சொல்வதுபோல் இருந்தது.

06.2014
28

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1389 - ஒட்டோமான் மற்றும் செர்பியப் படைகள் கொசோவோவில் போரை ஆரம்பித்தன. இப்போர் ஒட்டோமான் இராணுவத்தினர் தென்கிழக்கு ஐரோப்பாவைக் கைப்பற்ற உதவியது.
- 1519 - ஐந்தாம் சார்ல்ஸ் புனித ரோமப் பேரரசின் மன்னனானான்.
- 1651 - 17ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் போர் போலந்துக்கும் உக்ரைனுக்கும் இடையில் ஆரம்பமானது.
- 1763 - ஹங்கேரியில் நில்நடுக்கம் ஏற்பட்டது.
- 1776 - ஜார்ஜ் வோஷிங்டனை கடத்தத் திட்டமிட்டதற்காக அவரது மெய்ப்பாதுகாப்பாளராக இருந்த "தொமஸ் ஹின்க்கி" தூக்கிலிடப்பட்டான்.
- 1880 - அவுஸ்திரேலியாவின் காட்டுக் கொள்ளைக்காரன் நெட் கெலி பிடிபட்டான்.
- 1914 - ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசர் பிரான்ஸ் பேர்டினண்ட், மற்றும் அவனது மனைவி சோபி இருவரும் சேர்பியாவில் கொல்லப்பட்டனர். முதலாம் உலகப் போர் ஆரம்பிப்பதற்கு இதுவே காரணியாக அமைந்தது.
- 1919 - முதலாம் உலகப் போர்: பாரிசில் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு போர் முடிவுக்கு வந்தது.
- 1922 - ஐரிய உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1940 - சோவியத் ஒன்றியம் பெசராபியாவை ருமேனியாவிடமிருந்து கைப்பற்றியது.
- 1950 - வட கொரியா சியோலைக் கைப்பற்றியது.
- 1964 - மால்க்கம் எக்ஸ் ஆபிரிக்க அமெரிக்க ஒன்றியத்தை ஆரம்பித்தார்.
- 1967 - கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் தன்னுடன் இணைத்துக் கொண்டது.
- 1995 - மண்டைதீவுத் தாக்குதல், 1995: மண்டைதீவு இராணுவப் படைத்தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தனர்.
- 2004 - ஈராக்கின் ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய அமெரிக்கா ஈராக்கியர்களிடம் ஒப்படைத்தது.

### பிறப்புகள்

- 1703 - ஜோன் வெஸ்லி, மெதடிசத்தை அறிமுகப்படுத்தியவர். (இ. 1791)
- 1907 - தாவீது அடிகள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழறிஞர் (இ. 1981)
- 1921 - பி. வி. நரசிம்ம ராவ், இந்தியாவின் 9ஆவது பிரதமர் (இ. 2004)
- 1940 - முகமது யூனுஸ், வங்காள தேசத்தைச் சேர்ந்த பொருளியலாளர், நோபல் பரிசு பெற்றவர்.
- 1940 - கர்பால் சிங், மலேசிய வழக்கறிஞர், அரசியல்வாதி (இ. 2014)

### இறப்புகள்

- 1836 - ஜேம்ஸ் மாடிசன், ஐக்கிய அமெரிக்காவின் 4ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1751)
- 1914 - பிரான்ஸ் பேர்டினண்ட், ஆஸ்திரிய இளவரசர் (பி. 1863)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கிணைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் -8

## இளந்தென்னையில் கருவண்டின் தாக்கத்தை கட்டுப்படுத்தல்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

உங்களுக்காக எமக்குத் தெரிந்த வறறை இக்கட்டுரைத் தொடர் மூலம் எழுத வலம்புரி அமைத்துத் தந்திருக்கின்ற களம் பெறுமதி வாய்ந்தது.

கற்றறிந்தலதை இன்னும் பட்டறிந்ததை வழக்கமாக மாணவர்களுக்கு கற்பிப்பதை தொழிலாகக் கொண்டிருந்தாலும் அதனையுந் தாண்டி எம்மினிய உறவுகள் உங்களுக்கு அவற்றை உங்களுக்கு புரியும் மொழியில் என் தாய் மொழியில் எடுத்துச் சொல்வதற்கு கிடைத்த வாய்ப்பாக என்றும் கருதுகின்றேன்.

இருந்தாலும் இக்கட்டுரைகள் உங்களுக்கு பிடித்தமானவையாக இருக்கின்றனவா அல்லது அவற்றுக்குள் நீங்கள் தேடுகின்ற பதில்கள் இருக்கின்றனவா என ஒவ்வொரு கட்டுரையை எழுதும் போதும் எழுதும் இக்கைகளுக்கு எண்ணத் தோன்றும். அவ்வப்போது அங்கலாய்த்தும் கொள்ளும்.

நாம் நினைத்ததை மட்டும் தொடாந்து எழுதாமல் நீங்கள் வேண்டியதை, அறிய் விரும்புவதை எழுதும் போது அதற்கு கிடைக்கும் மகிழ்ச்சியே தனி. குறிப்பாக விவசாய விஞ்ஞானம் கற்கும் மாணவர்களுக்காக அவர்கள் அறியவிரும்பும் தகவல்களை தொகுத்து தரும்போதுள்ள சுகமே தனி.

இன்னும் தொடர்ந்து எழுத உங்கள் கருத்துக்கள் எமக்கு ஊக்க சக்தியாக இருக்கும். வலம்புரிக்கு சாவகச்சேரியிலிருந்து எம்மினிய உறவு ஒருவர் எழுதிய கடிதத்தின் சாராம் சம தொலைபேசியில் எமக்கு தெரியப்படுத்தப்பட்டு தென்னையில் தாக்கத்தை ஏற்படுத்தும் கருவண்டைப் பற்றி விசாரித்திருக்கின்றார்.

அதனை கட்டுப்படுத்துவது பற்றியும் அவர் வினவியிருக்கின்றார். அதனால் அந்த எம்மினிய உறவின் தேவை மற்றையவர்களுக்கும் இருக்குமென்பதால் இக்கட்டுரை அதுசார்ந்து இன்று அமைந்திருக்கின்றது. தேடுங்கள் இதற்குள்ளும் சூழலுக்கிணைவான பசுமைத்தொழில் நுட்பங்கள் பல ஒளிந்திருக்கின்றன.

தென்னை பயிரிடுகின்ற இடங்களில் பிரச்சினையாக இக்கருவண்டு இருந்தாலும் இதனது சேதம் பொதுவாக அனைத்து தென்னைகளிலும் காணப்படுவது சாதாரணமாகும். வளர்ந்த தென்னைகளில் தாக்கம் அதிகமாக இல்லாவிட்டாலும் இளந்தென்னைகளில் இக்கருவண்டின் தாக்கம் அதிகமானதாகும். இளமைப் பருவம் இளகிய பருவமென்பதாலோ என்னவோ பிரச்சினைகள் அதிகமாக இருப்பதை அவதானிக்கலாம். இதனால் தான் என்னவோ தென்னையின் இளம்பருவத்தை பிள்ளைக்கு உவமைப்படுத்தியிருக்கின்றனர். எங்களூரிலுள்ள நொந்து போயிருக்கின்ற் பெற்றோர்களைக் கேட்டால் பெற்ற பிள்ளையை விட வைத்த பிள்ளை இன்றும் பலனை தருகன்றதென்பார்கள்.




பெற்ற பிள்ளை தம்மையும் கவனிக்காது தன்னையும் ஓயவிடாது ஓடிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் வைத்த பிள்ளை தன்னலம் பாராது தம்மை இன்று கவனிப்பதையும் தாம்பெற்ற பிள்ளையை இன்னும் கவனிக்கும் என்பதையும் நினைந்து மன அமைதி கொள்கின்றார்கள்.

இது வைத்த் பிள்ளையின் பிரச்சினையென்பதால் அதற்கான கவனிபபும் அதிகமாகவே இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

தென்னை நடுகைசெய்துள்ள இடங்களில் குறிப்பாக தென்மராட்சிப் பிரதேசங்களில் தென்னம்பிள்ளைகளை காண்டாமிருக வண்டு வட்டுப் பகுதியில் தனது வாயுறுப்பினால் துளைபோட்டு நடுக்குருத்து உள்ள இடங்களை உண்ணுவதனால் வட்டுப் பகுதியில் பெரிய துவாரமேற்படுத்தப்பட்டு தென்னை தொடர்ந்து வளர முடியாமல் இறக்கின்ற தன்மையை அவதானிக்கலாம். கருவண்டு பலம் வாய்ந்த வண்டு. தனது கனதியான் வாயுறுப்பினால் தென்னங்கன்றின் வட்டுப்பகுதியில் துளைபோட்டு உட்பகுதியை உணவாக கொள்ளும் திறனுடையது.

உண்ட கழிவை (தும்புபோன்றது) அந்த துளையினூடாக வெளிதள்ளிவிடும். துளையை அவதானிக்கக் கூடியளவிற்கு தென்னங்கன்று வளர்ந்திருந்தால் அந்த வெளித்தள்ளப்பட்ட கழிவை அகற்றிப்பார்த்தால் துளையை அவதானிக்கலாம்.

இந்த துளையினூடாக குத்தூசி ஒன்றை செலுத்தி நிறைவுடலியான காண்டாமிருக வண்டை குத்தியெடுத்து அழிக்கலாம். ஆனால் இதற்கு குத்தியெடுக்கும் திறன் தேவை. ஊரில் ஊசியால் குத்தியெடுக்கும் விற்பன்னர்கள் இருக்கிறார்கள், அவர்களை பயன்படுத்தி இதனை செய்யலாம்.


ஆனால் இப்போதெல்லாம் அவர்களை தேடிப் பிடிப்பது கடினமென்பதால் நாமே அந்த திறனை வளர்த்தெடுத்துக் கொள்ளலாம். முயன்று பாருங்கள் உங்களாலும் முடியும்.

ஆனால் தென்னங் கன்று இளவயதினதாக வட்டுப் பகுதி மண்ணிற்குள்ளேயே இருந்தால் துளைப் பகுதியை அவதானிப்பதோ அல்லது ஊசியின் மூலம் குத்தியெடுப்பதோ சாத்தி யமானதல்ல. இதற்கு வேறு வழிகளையே கையாள வேண்டும். நிறைவுடலி வண்டின் உருவமைப்பை பார்ததால் உங்களுக்கே புரியும், இதற்கு மென்மையான கழுத்து பகுதியொன்றுண்டு. அந்த கழுத்துப் பகுதியை அசைக்க முடியாதவாறு மணல் மண்ணும் டிடிரி அல்லது தொடுகை பூச்சி நாசினியொன்றை மண்ணில் கலந்த வட்டுப் பகுதிக்குள் தூர்விட்டால் கழுத்துப் பகுதியில் மணல்மண்ணும் பூச்சி நாசினியும் படும்போது கழுத்துப் பகுதியில் ஏற்படும் காயத்தினூடாக பூச்சி நாசினி சென்று இவ்வண்டினை இறக்கச் செய்துவிடும். தென்மராட்சியில் காபோபியூரான் குறுனல்களை வட்டுப் பகுதியினுள் போட்டும் இவ் வண்டுகளை அழித்திருந்ததாக பலர் கூறுகின்றார்கள். காபோபியூரான் குறுனல்கள் எவ்வாறு கருவண்டுகளை கட்டுப்படுத்துகின்றது என்பது அதனது இரசாயன செயற்பாடுகளை கொண்டு பார்த்தால் அதிசயமாகத்தான் இருக் கின்றது.

இருந்தாலும் விவசாய பெரு மக்களின் கருத்து பொய்க்காது என்பதனால் இதுபற்றி ஆய்ந்து மக்களுக்கு தெரியப்படுத்துவது நல்லது.

இக்கருவண்டின் இளம்பருவம் ஆங்கில எழுத்தில் 'ஊ' போன்றிருக்கும். இதனை குறவணன் புழு எனவும் அழைப்பர். இவ்விளம் பருவத்தினை அழிப்பதன் மூலமும் இவ்வண்டினை கட்டுப்படுத்தலாம். கருவண்டு உங்கள் தென்னந்தோட்டத்திலுள்ள எருக்குவியல் அல்லது இறந்த தென்னை மரத்தினுள் முட்டையிடும். முட்டை பொரித்து வெளிவரும் குறவணன் புழு எருக்குவியலினுள்ளேயும் இறந்த தென்னைமரங்களுக்குள்ளேயும் இருந்து உணவுண்டு பெருகும். எருக்குவியலை அடிக்கடி பிரட்டிப் போட்டால் இக்குறவணன் புழுக்களை கண்டுபிடிக்கலாம். அவற்றை வெளியிலெடுத்து போட்டுவிட்டால் இரை கௌவி பறவைகள் அவற்றை உணவாக்கிக்கொள்ளும்.

காகம், செண்பகம் என்பன இவற்றை உணவாக்கும் தன்மையுடையவை. எருக்குவியல் உங்கள் தோட்டத்தில் இல்லாவிட்டால் இப் பூச்சிப்பீடை பெருகாது என எண்ணக் கூடாது. உங்கள் அயலிலுள்ள தோட்டத்தில் இருந்தாலும் அது பெருகி உங்கள் தென்னைகளை தாக்கிவிடும்.



கருவண்டு அல்லது காண்டாமிருக வண்டு

மற்றையவர்களுக்கு பிரச்சினையானதாக இருந்தாலும் எமக்கு அனுகூலமாக இருந்தால் அதனை செயயும் நம்மவர்களுக்கு மத்தியில் இந்த உத்தி பெரிதாக பலன்தராது.

இதற்கு உங்கள் பகுதி மக்களுக்கு இப் பீடையின் தன்மை பற்றியும் தாக்கம் பற்றியும் தெரியப்படுத்தி ஒவ்வொருவரும் முன்வந்து தங்கள் நிலத்திலுள்ள எருக்குவியல்களை அடிக்கடி பிரட்டி விடுவதை வழக்கமாக கொள்ளவேண்டும்.

குறவணன் புழுக்களை சேகரித்து அழிப்பது மிகவும் முக்கியமான விடயம்.

இளம்பருவங்களை அழித்துவிட்டால் அவற்றின் வாழிடங்களை இல்லாதாக்கிவிட்டால் இக்கருவண்டின் எண்ணிக்கையை கணிசமான அளவில் குறைத்து விடலாம். இதற்கு உங்கள் பகுதி மக்களனைவரினதும் கூட்டு முயற்சி அவசியமாகும்.

மேலும் சுற்றுவட்டாரத்தில் இப் பீடைத்தாக்கம் தென்பட்டால் இக் கருவண்டு கணிசமான எண்ணிக்கையில் உங்கள் பகுதியில் இருக்கின்றது என்பது அர்த்தமாகும்.

தென்னை மரங்களுக்கடியில் வாய் அகன்ற மட்பானையொன்றில் ஆமணக்கம் பிண்ணாக்கு 1 கிலோவை 2 லீற்றர் நீரில் கரைத்து வாய்ப்பகுதி மண்ணின் மட்டத்திற்கு வெளியே தெரியுமாறு மட்பானையை மண்ணற்குள் புதைத்து விடவும் ஒவ்வொரு நாள் காலையிலும் மட் பானைக்குள் வந்து விழுந்த வண்டுகளை சேகரித்து அழித்து விடலாம்.

இவ்வண்டு விரைந்து பெருகும் தன்மை கொண்டதில்லை யென்றாலும் நாம் கடினமான முயற்சியை எடுத்தால் நிச்சயமாக இப்பீடையை கட்டுப்படுத்த முடியும்.

முயன்று பாருங்கள், உங்களது இவ்வண்டு சார்நத புதிய கட்டுப் பாட்டு முறைகளை நீங்கள் கண்டு பிடித்தால் அதனை எங்களுக்கும் தெரியப்படுத்துங்கள். ஆய்ந்து அதனை தென்னை நடுகைசெய்யும் எம்மினிய உறவுகளுக்கும் தெரியப் படுத்துவோம். அனைவரும் இன்புற்றிருக்க நாமனைவரும் முயற்சி செய்வோம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-VII

---

# எரிபொருள் கையிருப்பில் இருப்பதால் தட்டுப்பாடு ஏற்படாது

## அமைச்சர் யாப்பா விளக்கம்

(கொழும்பு)

கடலில் அமைக்கப்பட்டுள்ள மிதவையில் கோளாறு ஏற்பட்டுள்ளதால் மசகு எண்ணெயைக் கரைக்கு எடுத்து வரும் பணிகள் சுமார் ஒரு மாத காலமாக தடைப்பட்டுள்ளன.

இருந்த போதும் நாட்டில் எதுவித எரிபொருள் தட்டுப்பாடும் கிடையாது. ஒரு மாத காலத்திற்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் இருப்பதாக பெற்றோலிய கைத்தொழில் அமைச்சர் அநுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவ்தாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் எதுவித உண்மையும் இல்லை. மிதவை மற்றும் குழாய்களில் ஏற்பட்டுள்ள கோளாறுகள் பத்து தினங்களில் திருத்தி எரிபொருள் குழாய் ஊடாக பெறும் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்கத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

திருத்தப் பணிகளுக்கு வெளிநாட்டிலிருந்து நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். மசகு எண்ணெயை குழாய் மூலம் அனுப்பும் பணி மேலும் தாமதமடைந்தால் மசகு எண்ணெய் கப்பலிலிருந்து வேறு சிறிய கப்பல்களுக்கு அவற்றை மாற்றி கரைக்கு எடுத்துவர நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல நாடுகளுடன் ஆராய்ந்து வருகிறோம்.

இதேவேளை சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் திருத்தப் பணிகளுக்காக மூடப்பட்டுள்ளது. அடுத்த மாதம் முதலாம் திகதியளவில் இங்கு மீண்டும் சுத்திகரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றார். (அ-2)

---

# பிரச்சினைகளை புரிந்து கொண்டு அரசாங்கம் தீர்வு வழங்கவில்லை

## த இந்து நாளிதழ் சுட்டிக்காட்டு

இலங்கை இன்னமும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என இந்திய ஊடகமான த இந்து ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர், தெற்கின் சுற்றுலா நகரங்களான பேருவளை, அளுத்கம ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் நான்கு பேர் கொல்லப்பட்டதுடன், பாரியளவில் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் உருவாக்கப்பட்ட [illegible] இந்த சம்பவங்களின் பின்னணியில் செயற்பட்டுள்ளது.

நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாத காரணத்தினால பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

1980ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜே.வி.பி.வன்முறைகளை நினைவூட்டும் வகையில் இந்த சம்பவங்கள் இடம்பெற்றது.

கிறிஸ்தவ, முஸ்லிம்களுக்கு எதிராக இதற்கு முன்னரும் இவ்வாறான வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த அமைப்பின் நடவடிக்கைகளை அரசாங்கம் வேறு வார்த்தைகளினால் கண்டிக்கப்பட்டாலும், அந்த அமைப்பின் முக்கிய நிகழ்வுகளில் ஜனாதிபதியும் அவரது பலம்பொருந்திய சகோதரர்களும் பங்கேற்றுள்ளனர்.

நடுநிலையாக சிந்திக்கும் அனைத்து மக்களும் இந்த வன்முறைகளை கண்டிக்கின்றனர்.

ஏற்கனவே தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படாத நிலையில் முஸ்லிம் பிரச்சினைகளை தூண்டுவது ஆரோக்கியமானதல்ல. பிரச்சினைகளை சரியாக புரிந்து கொண்டு அதற்கு தீர்வு வழங்காது அர சாங்கம் கடந்த காலத்திற்கு செல்லவே முயற்சித்து வருவதாக த இந்து குற்றம் சுமத்தியுள்ளது.

யாரும் உயிர்களுக்கோ சொத்துக்களுக்கோ சேதம் விளைவிக்க முடியாது. அதற்கு அனுமதியில்லை என்பதனை அரசாங்கம் எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் வெளிப்படுத்த வேண்டும்.

அரசாங்கம் வரலாற்றில் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்பதே இவ்வாறான சம்பவங்களின் மூலம் தெளிவாகின்றது. கௌதம புத்தரா இதனை கற்பித்தார்? என பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழிவுகளை உபயோகப்படுத்துக!

(கண்டாவளை)


கரைச்சிப் பிரதேச சபையால் நாளாந்தம் அகற்றப்படுகின்ற கழிவுகளை மீள் சுழற்சி முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பிரதேச சபையினரால் அகற்றப் படுகின்ற கழிவுகள் உமையாள்புரம் பகுதியில் வீண் விரயமாக்கப் படுகின்றது.

இவற்றை உக்கல் அடையக் கூடியவை, உக்கல் அடையாதவை என தரம் பிரித்து மீள் சுழற்சிக்குட்படுத்துவதனூடாக பசளைகளாக உபயோகப்படுத்த முடியும்.

இவ்வாறான செயற்பாட்டினை முன்னெடுக்கும் பட்சத்தில் சூழல் மாசடைவை குறைப்பதுடன் பயன்பாட்டுப் பொருளாக கழிவுகள் மாற்றப்படுமென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(9-263)




# அடிப்படை வசதிகளின்றி அல்லலுறும் செல்வாநகர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள செல்வாநகர் கிராமம் பல்வேறு அடிப்படை வசதிகளின்றிய நிலையிலுள்ளதாக கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இக் கிராம மக்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக குடிசைகளிலே வாழ்க்கையை நகர்த்தி வருகின்றனர்.

எனினும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங்களாகியுள்ள நிலையில் 850 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர்.


இவர்களில் சுமார் 150 குடும்பங்களுக்கு மாத்திரமே வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய குடும்பங்கள் வசதிகளின்றிய தற்காலிக கொட்டகைகளிலே வாழ்கின்றனர்.

இவர்களின் மணலாறு வீதியிலுள்ளவர்களுக்கு மாத்திரமே மின்சாரம் வழங்கப்படவில்லை.

அத்தோடு கிராமத்திற்கு செல்லும் வீதிகளில் ஓரிரு வீதிகள் மாத்திரமே செப்பனிடப்பட்டுள்ள போதும் ஏனைய வீதிகள் போக்குவரத்துச் செய்வதற்கு ஏதுவாகக் காணப்படவில்லை.

இக் கிராமத்தினுள் பேருந்து வசதிகளின்மையால் 3கிலோ மீற்றருக்கு அப்பால் சென்று பேருந்து சேவையைப் பெற்றுக் கொள்கின்றனர்.



இந்நிலையில் கிராமத்திற்கான பேருந்து சேவையை பாடசாலை வரையுமாவது ஏற்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை கண்காணிப்பவர்களோ அல்லது முக்கிய பிரமுகர்களோ இக்கிராமத்திற்கு வருகை தருவதில்லையெனவும் தங்களின் பிரச்சினைகளை ஆராய்வது இல்லையெனவும் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

எனவே, இக்கிராம மக்கள் எதிர்நோக்கும் அவல வாழ்க்கையை வந்து பார்வையிட்டு தீர்வைப் பெற்றுத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (9-271)

## சீவல் தொழிலை முன்னெடுக்க இலகு நடைமுறைகளை ஏற்படுத்துக

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சீவல் தொழிலாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நடைமுறைகளை தளர்த்துமாறு தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம்மாவட்டத்திலுள்ள சீவல் தொழிலாளிகள் பதனீர் விற்பனை நிலையத்திற்கு முற்பகல் 11 மணிக்கு முன்னர் பதனீரை வழங்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ் விதிமுறையினால் அங்குள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடினமான தொழிலாக இது காணப்படுவதால் மழை, காற்று, வெயில் போன்ற காலநிலை மாற்றங்களால் தொழிலை குறித்த நேரத்தினுள் நிறைவு செய்ய முடியாத சூழ்நிலை காணப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்தோடு, குறித்த நேரத்திற்கு பின்னர் வீதிகளில் கொண்டு செல்லப்படுகின்ற மற்றும் வீடுகளில் தேவைக்கென வைக்கப்பட்டுள்ள குறைந்தளவான பதனீரை சட்டவிரோதமான மது விற்பனை எனக் கூறி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் செயற்பாடும் இடம் பெற்று வருவதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் திணைக்களத்தினரும் சமூக மட்ட அமைப்புக்களும் இத் தொழிலாளர்களோடு கலந்துரையாடி தொழிலினால் பயனடையக் கூடிய வகையிலும் சமூகத்திற்கு ஏற்பவும் இலகுவான சட்ட நடை முறைகளை அமுல்படுத்த வேண்டுமென தொழி லாளர்கள்வலியுறுத்தியுள்ளனர். (9-27)

## குன்றும் குழியுமாகவுள்ள வீதியால் போக்குவரத்து செய்வோர் சிரமம்

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான வீதிகள் தவிர்ந்த கிராமங்களின் உட்புறமாகவுள்ள வீதிகள் பல திருத்தப்படாது கைவிடப்பட்ட நிலையில் உள்ளது

இதன்படி மாங்குளம் முல்லைத்தீவு வீதியையும், நெடுங்கேணி முல்லைத்தீவு வீதியையும் இணைக்கின்ற சுமார் ஒரு கி.மீற்றர் தூரமுள்ள காட்டாவிநாயகர் ஆலய வீதி பல தசாப்த காலமாக தாரிடப்பட்ட முல்லைத்தீவு வவுனியாவுக்கான பேருந்து போக்குவரத்துக்கள் நடைபெறுகின்ற முக்கிய வீதி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இக்கிராமத்திலுள்ள மாணவர்களும் விவசாயிகளும், அயல் கிராம மக்களும் தமது வயல், தோட்ட நிலங்களுக்குச் செல்வதற்காகவும், ஆலயங்கள், சந்தைகள் போனற பொதுத்தேவைகளுக்குச் செல்வதற்கும் இவ் வீதியினையே பயன்படுத்தி வருகின்றனர்.

எனினும் இவ்வீதி திருத்தம் செய்யப்படவில்லை இம் மாதம் முதல் வாரத்தில் மேற்படி வீதியில் அமைந்துள்ள வரலாற்றுப் பெரு மைகளையும் கலாசாரப் பாரம் பரியங்களையும் கொண்ட காட்டா விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா நடைபெற்ற நிலையிலும் அதனை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எனவே மேற்படி வீதியை நீண்ட காலப் பாவனைக்கு ஏற்றமுறையில் புரனமைக்க நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்டோர் முன் வர வேண்டுமென மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (9-250)

## கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(வவுனியா)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் வவுனியா கற்கை நிலையத்தில் நடத்தப்படும் பொறியியல் பட்டப்படிப்பிற்கும் அடிப்படை கற்கை நெறிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வவுனியா கற்கை நிலைய உதவிப் பணிப்பாளர் நா.கமிலஸ் தெரிவித்துள்ளார்.

தகுதியுடையோர் விண்ணப்பப்படிவங்களை நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (9)

## வேலை கோரி போராடிய பெண்களுக்கு தீர்வில்லை

(குருமன்காடு)

வவுனியா நகரசபையில் கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் ஒப்பந்த அடிப்படையில் சுகாதார தொழிலாளர்களாக பணியாற்றிய இரு பெண்களின் ஒப்பந்தமானது கடந்த மே மாதத்துடன் இரத்துச் செய்யப்பட்டது.

இதனால் கணவனை பிரிந்த நிலையில் தமது பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த இரு பெண்களும் தமக்கு மீண்டும் தொழிலினை வழங்குமாறு கோரி கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் போராடி வருகிறார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை நகரசபை கூரை மேல் ஏறி போராடியவர்கள் தற்போது நகரசபைக்கு முன்னால் இருந்து தமக்கு வேலை கோரி போராடி வருகிறார்கள்.

ஆனால் அவர்களது கோரிக்கையை இதுவரை யாருமே ஏற்றுக் கொள்ளவில்லை.

எனினும் பொறுப்பு வாய்ந்த நகரசபை நிர்வாகம்,வாக்குறுதி கொடுத்த அரசியல்வாதிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. (9-250)

## குடிநீர் திட்டத்தை விஸ்தரிக்குக

கிளிநொச்சி அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தினூடாக கோணாவில் கிழக்கு காந்தி கிராமம் ஆகிய கிராமங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற குடிநீர் திட்டத்தை விஸ்தரிக்குமாறு ஏனைய கிராம மக்கள் கோரியுள்ளனர்.


கிளிநொச்சி மாவட்டத்தில் என்றுமில்லாத வகையில் வரட்சி ஏற்பட்டுள்ளது. இந்நிலைக்கு கோணாவில் கிழக்கு காந்தி கிராமம் ஆகியவற்றுக்கு 1மாத காலமாக அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தினால் ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் குடிநீர் விநியோகிக்கப் பட்டு வருகின்றது.

இதனூடாக 670 வரையான குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இச்செயற்பாட்டை அயற்கிராமங்களிலும் நடைமுறைப்படுத்துமாறு மக்கள் கோரியுள்ளனர். (9-271)





வவுனியா தெற்கு வலய கல்வி அலுவலக கல்வியியலாளர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் செயலமர்வு நேற்று முன்தினம் நடைபெற்ற போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமர்நாத் யாத்திரை ஆரம்பம்



ஜம்மு காஷ்மீரில் இருந்த முதல் தொகுதியாக ஆயிரத்து 160 யாத்திரிகர்கள் நேற்று அமர்நாத் யாத்திரைக்கு புறப்பட்டனர்.

இந்த ஆண்டு அமர்நாத் கோவிலில் 20 அடி பனி லிங்கம் காண முடியும் என கூறப்படுகிறது. இருப்பினும் கடுமையான பனி காரணமாக பஹல்காம் பாதையில் யாத்திரிகர்கள் சிரமங்களை மேற்கொள்ள நேரிடும் என்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் கத்துவாவில் இருந்து ஜம்மு நெடுஞ்சாலையில் பல்வேறு பாதுகாப்புகள் யாத்திரிகர்களுக்காக செய்யப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பக்தாத்தை சூழ்ந்துள்ள போராளிகள் மீது விமானம் மூலம் குண்டு வீச்சு

(பக்தாத்)

ஈராக் உள்நாட்டுப் போர் கடந்த 3 நாட்களாக தீவிரம் அடைந்து வருகிறது. ஈராக்கின் மேற்கு பகுதியில் உள்ள முக்கிய எண்ணெய்க் கிணறுகள், அணைக்கட்டுகளை தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்.

இதன் காரணமாக ஈராக்கின் எண்ணெய் உற்பத்தியும், மின் உற்பத்தியும் போராளிகள் கட்டுப்பாட்டுக்குள் சென்றுள்ளது.

இதற்கிடையே ஈராக் தலைநகர் பக்தாத்தை குறி வைத்து போராளிகள் மெல்ல மெல்ல முன்னேறி வருகிறார்கள்.

ஐ. எஸ்.ஐ.எஸ். போராளிகளில் வலுவான ஒரு படை பக்தாத்தில் இருந்து சுமார் ஒரு மணி நேர பயணத் தூரப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய திசைகளில் இருந்தும் போராளிகள் பக்தாத் நோக்கி நகர்ந்து வருகிறார்கள். எனவே போராளிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே இறுதி கட்ட போர் எந்த நேரத்திலும் ஏற்படலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

போராளிகளின் நகர்வு பக்தாத் நகர மக்களிடம் பதற்றத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. பக்தாத்தை போராளிகள் முற்றுகையிட்டாலும் நகருக்குள், அவர்களால் எளிதில் நுழைய முடியுமா? என்பதில் கேள்விக்குறி நீடிக்கிறது.

பக்தாத் நகரை சுற்றி ஷியா இன முஸ்லிம்கள் அதிகம் உள்ளனர். அவர்கள் போராளிகளை எதிர்த்துப் போராட அரண் அமைத்தப்படி உள்ளனர்.

இந்த பாதுகாப்பு அரணை உடைக்க ஷியா முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகளில் போராளிகள் தற்கொலை தாக்குதல்களை தொடங்கியுள்ளனர்.

எனவே, பக்தாத் நோக்கி முன்னேறும் போராளிகள் மீது விமானம் மூலம் குண்டுகள் வீசி தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மொசூல், திக்ரித் நகரங்களையும் மீட்க விமானத் தாக்குதலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே தீவிரவாதிகளை இராணுவ நடவடிக்கைகள் மூலம் முழுமையாக ஒடுக்க முடியாது என்று கூறப்படுகிறது. எனவே, உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வர சன்னி முஸ்லிம்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் புதிய அரசை உருவாக்க ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

ஐ.நா. சபையும் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன் எதிர்வரும் முதலாம் திகதி ஈராக் பாராளுமன்றம் கூட உள்ளது. அப்போது புதிய அரசுக்கான நடவடிக்கைகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## எல் நினோ அபாயம்

இந்த ஆண்டு இறுதிக்குள் உலகின் பல நாடுகளை எல் நினோ எனப்படும் கடலின் மேற்பரப்பில் ஏற்படும் வெப்ப நீரோட்டத்தால் அபாயம் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

ஜெனீவாவை தலைமையிட மாக கொண்டு செயறபடும் சர்வதேச வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கையின்படி, இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் எல் நினோவின் பாதிப்பால், அமெரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் கடுமையாக பாதிக்கப்படலாம் என்றும், இந்தியாவில் வழக்கமான பருவ மழையின் அளவு குறையலாம் எனவும் கூறப்படுகிறது.



ஒடிசாவில் பூரிஜெகநாத் தேரோட்டம் நடக்கவிருப்பதையொட்டி கடற்கரையில் வரையப்பட்டுள்ள மணற்சிற்பம்

## இராணுவ நடவடிக்கை நிறுத்தம்



தீவிரவாதிகளை ஒடுக்குவதில் பிலிப்பைன்ஸ் அரசு துருப்புகளுக்கு புரிந்த உதவி வெற்றியடைந்துள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து தெற்குப் பகுதியில் செயற்பட்டு வந்த இராணுவ அதிகாரிகளின் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைத்துள்ளதாகவும் அமெரிக்க பாதுகாப்பு செயலர் வால்டைர் கஸ்மின் தெரிவித்துள்ளார்.

இதுநாள்வரை அங்கு செயற்பட்டு வந்த கூட்டு சிறப்பு நடவடிக்கை பணிக்குழு கலைக்கப்படுவதாக பிலிப்பைன்ஸ் அரசுக்கு அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்து விட்டதாகவும் அவர் கூறினார்.

தங்களுடைய பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை வெற்றியடைந்ததால் தெற்குப் பகுதியில் இருந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கான மாற்றுத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமெரிக்க தூதரகத்தின் தகவல் தொடர்பாளர் குர்ட் ஹோயர் குறிப்பிட்டார்.

# தமிழகத்திலும் இந்தி வேண்டும்

## இல.கணேசன்



கலைஞரின் குடும்பத்தில் மட்டும் எல்லோரும் இந்தி கற்று கொள்வார்கள். ஆனால், சாமானிய மக்களை மட்டும் இந்தி கற்க விடாமல் ஏமாற்றுகிறார்கள் என பா.ஜ.க வின் தேசிய பொதுக்குழு உறுப்பினர் இல.கணேசன் கூறியுள்ளார்.

ஜனசங்க நிறுவுநர் ஷியாம் பிரசாத் முகர்ஜி நினைவு நாள் மற்றும் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் பங்கு கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

தமிழகத்தில் மொழி பிரச்சினையில் நிலைமை மாறி வருகிறது. இது 1967 ஆம் ஆண்டும் இல்லை. இப்போது தி.மு.க. ஆட்சியிலும் இல்லை. கருணாநிதி பூச்சியத்தில் தான் நின்று கொண்டிருக்கிறார்.

தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் இந்தியில் கடிதம் எழுகிறார்கள். விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை நாடுமுழுவதும் விற்க இந்தியை அறிந்து கொள்ள ஆசைப் படுகிறார்கள்.

நீர்த்துப் போன மொழி பிரச்சினையை மீண்டும் கையிலெடுத்தால் இந்தி வேண்டும் என்ற போராட்டம் தமிழகத்தில் வெடிக்கும்.

கலைஞரின் குடும்பத்தில் மட்டும் எல்லோரும் இந்தி கற்று கொள்வார்கள். ஆனால், சாமானிய மக்களை மட்டும் இந்தி கற்க விடாமல் ஏமாற்றுகிறார்கள். கருணாநிதி தனது மொழிபற்று நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும்.

சாதாரண மக்கள் அவரவர் தாய்மொழியில் பிரதமருக்கு கடிதம் எழுதினால் அதை பிரதமர் அலுவலகத்தில் இந்தியில் மொழி பெயர்த்து மோடியிடம் தெரிவிக்க வழி வகை செய்ய வேண்டும் என்பது எனது விருப்பம்.

செல்போனிலேயே மொழிமாற்றம் செய்யும் மென்பொருள் இருக்கும் பிரதமர் அலுவலகத்தில் இந்த வசதி செய்வது சாதாரணம் தான் என அவர் கூறினார்.

# எரிவாயு பைப்லைன் விபத்து; 15 பேர் பலி, பலர் காயம்!

ஆந்திராவில் உள்ள கெயில் பைப்லைனில் நேற்று அதிகாலை ஏற்பட்ட வெடிவிபத்தில் 15 பேர் பலியாகி உள்ளனர். மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் நாகாரம் பகுதியில் மத்திய அரசு நிறுவனமான இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் ஆலை உள்ளது.

குடியிருப்பு பகுதிக்கு மிக அருகிலுள்ள இந்த ஆலையில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில், எரிவாயு எடுத்துச் செல்லும் கெயில் பைப்லைனில் வெடிப்பு ஏற்பட்டது.

எரிவாயு கசிவு காரணமாக குழாய்கள் வெடித்து சிதறி தீ விபத்து ஏற்பட்டது. இதில் ஆலையில் பணி புரிந்த 15 தொழிலாளர்கள் பலியாகி உள்ளனர். மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

நாட்டின் மிகப் பெரிய எரிவாயு விநியோக ஆலையில் நடைபெற்றுள்ள இந்த விபத்து குறித்து விசாரிக்க ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு உத்தரவிட்டுள்ளார்.

தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கலையும், அவர்களின் குடும்பத்தினர்களுக்கு ஆறுதலையும் தெரிவித்து கொள்வதாக பிரதமர் மோடி தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# சிரியா கிளர்ச்சியாளர்களுக்கு நிதி உதவி வழங்கும் அமெரிக்கா



சிரியா கிளர்ச்சியாளர்களுக்கு 3 ஆயிரம் கோடி ரூபா நிதியுதவியை அமெரிக்கா வழங்குகிறது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல்ஆசாத்துக்கு எதிராக கடந்த 3 ஆண்டுகளாக போராட்டம் நடக்கிறது. தற்போது அது உள்நாட்டு போர் ஆக மாறிவிட்டது. போராடும் புரட்சி படையினர், இராணுவத்துடன் சண்டையிட்டு வருகின்றனர். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பலியாகிவிட்டனர்.

பொது மக்களின் புரட்சி படைக்கு அமெரிக்கா ஆதரவு அளித்துள்ளது. தங்களது சொந்த மக்களையே கொன்று குவிக்கும் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் அரசுக்கு ஒபாமா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், கிளர்ச்சியாளர்களின் புரட்சி படைக்கு 3 ஆயிரம் கோடியை அமெரிக்கா வழங்குகிறது. அதன் மூலம் அவர்கள் அதி நவீன போர்க்கருவிகள் வழங்கவும், அவர்களுக்கு போர் பயிற்சி அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கான ஒப்புதலை அமெரிக்க பாராளுமன்றத்தில் பெற ஜனாதிபதி ஒபாமா அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்துக்கு ஆதரவாக அல்கொய்தா ஆதரவு பெற்ற 'ஐ.எஸ்.ஐ.எஸ்.' தீவிரவாதிகள் உள்ளனர்.

அவர்கள் ஈராக்கில் முன்னேறி வருகின்றனர். புரட்சி படையை பலப்படுத்துவதன் மூலம் அவர்களின் முன்னேற்றத்தையும், அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் மீதான தீவிரவாதிகளின் அச்சுறுத்தலையும் முறியடிக்க முடியும் என அமெரிக்கா கருதுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதமாக வழங்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச் சமம்

~ உலகப் பொது மொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நீதிமன்ற விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்

அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்றொரு பழமொழி நம் மத்தியில் உண்டு.

குற்றம் செய்தவர்களுக்கு உடனடியாகவே தண்டனை வழங்குகின்ற நடைமுறை மன்னராட்சியில் இருந்தது.

எனினும் முடியாட்சி முடிந்து ஜனநாயக ஆட்சி மேலோங்கியபோது முற்றுமுழுதாக நீதிமன்ற நடைமுறை அமுலாகிற்று.

குற்றங்களை விசாரணை செய்வது, குற்றவாளியும் தனது நியாயப்பாடுகளை மன்றில் முன்வைப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவது என்ற அடிப்படையில் நீதிமன்ற விசாரணைகள் இடம்பெறுகின்றன.

எனினும் நீதிமன்ற விசாரணைகள் முடிவுற்றுத் தீர்ப்புகள் கிடைப்பதற்கான கால இடைவெளி மிகவும் நீண்டதாக இருப்பது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

குற்றங்களுக்கான தண்டனை உடனுக்குடன் வழங்கும்போது குற்றச்செயல்கள் குறைந்து போவதற்கான சாத்தியப்பாடுகள் உண்டு.

மாறாக விசாரணைகள் முடிவதற்கும் தீர்ப்புகள் கிடைப்பதற்கும் நீண்டகாலம் செல்லுமாயின் அது குற்றச்செயல்களை குறைப்பதற்கு எந்தவகையிலும் உதவமாட்டா.

அதாவது ஒரு குற்றவாளிக்கு நீதிமன்றம் வழங்கும் தண்டனை என்பது தனித்து குற்றவாளிக்கானது மட்டுமல்ல; மாறாக வழங்கப்படுகின்ற தண்டனைகள் இன்னொரு குற்றத்தை மற்றவர்கள் செய்யாமல் இருப்பதற்குமாகும்.

இதன் காரணமாகவே மத்திய கிழக்கு நாடுகளில் குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் தண்டனை விதிக்கும்போது அதனை பகிரங்கப்படுத்தி அந்தத் தண்டனையை நாட்டு மக்கள் பார்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இந்தக் குற்றச் செயலை செய்தால் எனக்கும் இப்படியொரு தண்டனை விதிக்கப்படும் என்ற பயத்தை மக்களிடத்தே ஏற்படுத்துவதன் ஊடாக சட்டம் ஒழுங்கை கடைப்பிடிக்க அந்த நாடுகள் முற்படுகின்றன; இது ஒரு வகை.

எங்களுடைய நாட்டில் நீதிமன்றங்களே குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குகின்றன.

எனவே நீதிமன்ற விசாரணைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். அவ்வாறான விரைவுபடுத்தலைச் செய்வதற்குத் தடையாக இருக்கக்கூடிய காரணிகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்திக்க வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை அதிலும் குறிப்பாக வடபகுதியில் காணி, கோயில் மற்றும் விவாகரத்து வழக்குகள் அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது.

கோயில் வழக்குகளை விசாரிப்பது தொடர்பில் இந்து சமய தலைமை அமைப்புகள் நடவடிக்கை எடுக்கின்ற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இதன்மூலம் கோயில் வழக்குகளைக் குறைக்கலாம். அது போல காணி வழக்குகள் தொடர்பிலும் ஒரு சுமுகமான முடிவினை எட்டுவதற்கு ஏற்ற ஏற்பாடுகள் அந்தந்த பிரதேசங்களில் செய்வது நீதிமன்றத்தின் சுமையைக் குறைப்பதற்கும் கடுங்குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளை விரைவுபடுத்துவதற்கும் பேருதவியாக அமையும்.

ஒரு குற்றவாளிக்குத் தண்டனை கிடைப்பதற்கு குறைந்தது 15 ஆண்டுகள் எடுக்குமாயின் அந்தத் தீர்ப்பினால் சமுதாய சீர்திருத்தத்திற்குக் கிடைக்கக்கூடிய சாதகத் தன்மைகள் குறைவடையும்.

மாறாக இதே தீர்ப்பை குற்றவாளி ஒரு வருடத்திற்குள் அல்லது 6 மாதங்களுக்குள் பெறுவாராயின் குற்றச்செயல்கள் வலுவாகக் குறைந்து போகும் என்பதால் நீதிமன்ற விசாரணைத் தீர்ப்புக்கள் விரைவுபடுத்தப்படுவது அவசியம். இது தொடர்பில் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும்.

# நாட்டின் சட்டத்தை பொதுமக்கள் கையில் எடுக்கும் காலம் ஏற்படலாம்

## எதிர்க் கட்சித் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் மழுப்பலான மற்றும் பாகுபாடான போக்குகள் காரணமாக பொறுமை இழந்துள்ள பொதுமக்கள் சட்டத்தை தம் கைகளில் எடுத்துக் கொள்ளும் நிலை ஏற்படலாமென எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய தலைவர்கள் மற்றும் சமூகத்தலைவர்களுடனான சந்திப்பின்போது ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

யுத்தம் முடிவுற்ற நிலையிலும் நாட்டில் வன்மு றைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அதனைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எதிர்காலத்தில் அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதாகவும் தெரியவில்லை.

இவ்வாறான நிலை தொடர்ந்தால் சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்ற பாகுபாடின்றி பொதுமக்கள் அனைவரும் நாட்டின் சட்டத்தை தம் கைகளில எடுத்துக் கொள்ளும் நிலை உருவாகும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதனைத் தடுப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாக அளுத்கம சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். அதன் மூலம் சட்டத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இந்த சம்பவம் தொடர்பில் அனைத்துக் கட்சி தலைவர்களும் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டு, அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரத்தை தடுக்க அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனினும் அதே தவறை இன்று அரசாங்கம் செய்துள்ளதாகவும் ரணில் சுட்டிக்காட்டினார்.

வன்முறைகள் நிறைவுற்றாலும் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான பிரச்சினைகள் இன்னும் முடிவடையவில்லை என்றார். (அ-2)


# இரத்தம் கோரி போலி எஸ்.எம்.எஸ்

ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கபபட்டிருக்கும் குழந்தைக்கு இரத்தம் ஏற்ற வேண்டியுள்ளதாக போலியான குறுந்தகவல் அனுப்பி இளைஞர் குழுவை அலைக்கழித்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினமிரவு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுள்ளது. குறித்த குழந்தைக்கு ஏபி பிளஸ் (AB) ஏற்ற குறுப் இரத்தம் தேவை என்று மேற்படி குறுந்தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மிகவும் அனுதாபமான முறையில் வேண்டுகோளை முன்வைத்து மேறபடி குறுந்தகவல் அனுப்பப்பட்டிருந்ததையடுத்து அந்தக்குறுந்த கவலையடுத்து இளைஞர் குழுவொன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டும் நேரடியாகவும் சென்று விசாரித்துள்ளனர்.

இந்நிலையில் மேற்படி குறுந்தகவல பொய்யானது என்றும் குழந்தை ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுவதும் பொய்யென்று தெரியவந்துள்ளது. (அ-2-6)

# ஸ்ரீ அம்மா பகவான் அனுக்ரக வித்யாமாலை



அறிவாற்றலை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைத் தேடி அலைகின்ற இன்றைய இளைய சமுதாயம் நவீனத்துவத்தின் போராட்டகரமான எண்ண ஓட்டத்தில் அறிவின் மூலாதாரத்தினை அடியோடு மறந்து விழிப்புணர்வற்ற நிலையில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இளைய சமுதாயத்தினை அவர்களது வாழ்க்கையில் இலட்சியத்தை உருவாக்கி அவ் இலட்சியத்தை அடைவதற்காக ஸ்ரீ அம்மா பகவான் வித்யாமாலை எனும் செம் அறிவாற்றல் மேம்படுத்தும் ஆன்மீக செயற்றிட்டத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

நாம் வெற்றி பெறுவதற்கான சிறந்த திறமைகள் நம்முள்ளே புதைந்து கிடக்கின்றன என்று அறிந்த போதிலும் நம் முன்னேற்றத்திற்கு தடையாக சோம்பேறித்தனம், கவனக்குறைவு, அசிரத்தை போன்ற பல எதிர்மறையான குணங்கள் செயற்படுகின்றன. இவை அனைத்திலிருந்தும் வெளிவருவதற்கு வித்யாமாலை உதவி புரிகின்றது.

ஸ்ரீ அம்மா பகவானால் அருளப்படும் வித்யாமாலையானது பல்வேறு திறமைகளிலும் துறைகளிலும் படிப்பிலும் உன்னத நிலையைப் பெறுவதற்கான 21 நாட்கள் கடைப்பிடிக்க வேண்டிய கல்வி விரதமாகும்.

மாணவர்களது, இளைஞர்களது வெற்றிப்பாதையில் உள்ள அனைத்துத் தடைகளையும் அகற்ற இது தெய்வீக அருள் உதவி புரியும்.

எம்முள் ஏற்படுகின்ற நேரான மற்றும் எதிர்மறையான எண்ணங்களை நமக்குள் உள்ள நரம்புகளின் வடிவமைப்பே நிர்ணயம் செய்கின்றன. வித்யாமாலை விதிகளைக் கூறியுள்ளபடியே பின்பற்றினால் புதிய நியூரான்கள் வடிவம் ஏற்பட்டு அதனால் நேரான எண்ணங்களும் புதிய கண்ணோட்டமும் உருவாகும்.

வித்யாமாலை அணிவதனால் ஏற்படும் தெய்வீக மாற்றங்களாவன,

பெற்றோருடனான உறவுமுறை சீராகும், உறவு முறைகளில் நெருக்கம் ஏற்படும், மாணவர்கள், இளைஞர்களிடையே விழிப்புணர்வு மலரும்,மன ஒருமைப்பாடு, ஞாபகசக்தி, கிரகிக்கும் ஆற்றல் மேம்படும், தெளிவான தீர்மானம் எடுக்கும் திறன் விருத்தியாகும். கல்வி கற்றலுக்கான தடைகள் நீங்கி எதிர்கால வளர்ச்சியில் முன்னேற்றம், விருப்பம், ஆர்வம், முயற்சி, உழைப்பு, கற்பனை, பொறுமை, அன்பு போன்ற உயர்ந்த எண்ணங்கள் விருத்தியாகும். தமது சொந்தக் கடவுளுடனான பந்தம்,.உறவுமுறை ஏற்படும்.

மேலும் சூழ்நிலைகளைச் சாதகமாக்கிக் கொள்வதன்மூலம் வாழ்க்கையின் இலட்சியத்தினை அடைவதற்கான வழிமுறைகளை வடிவமைத்தல் போன்ற பல உன்னதமான மாற்றங்கள் ஏற்படும்.

எனவே இந்த அற்புதமான பலா பலன்களை நல்கும் ஸ்ரீ அம்மா பகவான் வித்யாமாலை நிகழ்வு இளைய சமுதாயத்திற்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

**ஸ்ரீ அம்மா பகவான்**
**சத்சங்கங்களின் ஒன்றியம்,**
**யாழ்.மாவட்டம்.**

# தெய்வீகப் பேருரைகள்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு அறங்காவலர் சபை மற்றும் திருவிழா உபயகாரர்கள் ஏற்பாட்டில் தினமும இரவு 8 மணி தொடக்கம் 9 மணிவரை தெய்வீகப் பேருரைகள், கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதற்கமைய இன்று சனிக்கிழமை அறநெறிப்பாடசாலை ஆசிரியை க.சிவயோகராணி, நாளை ஞாயிற்றுக் கிழமை ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பா ளர் கு.சரவணபவானந்தன், எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட் கிழமை ஓய்வுபெற்ற முதன்மை ஆசிரியை இராமலிங்கம் ஜெயலட்சுமி ஆகியோரின் உரைகள் இடம்பெறும். (2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## பாதுகாக்கப்பட்ட மனம்



- உலக நன்மைக்காக உங்களிடமுள்ள அனைத் தையும் தியாகம் செய்யுங்கள். சுயநலமில்லாத வாழ்வே உயர்ந்தது.
- மனத்தூய்மை இருந்தால் மட்டுமே கடவுளை அடைய முடியும். மற்றவை எல்லாம் இரண்டாம் பட்சம் தான்.
- அரிய பெரிய விஷயம் எல்லாம் பலத்த தடைகளைச் சந்தித்த பிறகே கைகூடுகின்றன. அதனால், முயற்சியை ஒருபோதும் கைவிடாதீர்கள்.
- கோழைகளே வாழ்வில் பாவம் செய்கின்றனர். தைரியம் கொண்டவர்கள் ஒருக்காலும் பாவம் செய்ய மாட்டார்கள்.
- இதயம் விரிவடையும் இடத்தில் தான் உண்மை ஞானம் உதிக்கும். உண்மை ஞானத்தை அடைவதே பிறவிப்பயன்.
- அடக்கப்படாத மனம் மனிதனை கீழ்நோக்கி இழுத்து சென்று விடும். அடக்கப்பட்ட மனமோ அவனுக்கு பாதுகாப்பு அளிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடி சமநிலை செய்தது அல்ஜீரியா; தொடரிலிருந்து வெளியேறியது ரஷ்யா



உலக கோப்பை காற்பந்து போட்டியில் அல்ஜீரியா மற்றும் ரஷ்ய அணிகள் மோதிய ஆட்டம் நேற்று நடைபெற்றது. ஆட்டம் தொடங்கிய ஆறாவது நிமிடத்திலேயே ரஷ்யாவின் கோகோரின் தனது தலையால் முட்டி அற்புதமான கோலை போட்டார்.

24 ஆவது நிமிடத்தில் ரஷ்யாவின் கொம்பாரோவ் அடித்த பந்தை ஹாலிச்சி தடுத்து ஆடினார். 27 ஆவது நிமிடத்தில் அல்ஜீரியாவின் மெஸ்பா அடித்த பந்தை ரஷ்யாவின் அகின்பீவ் தடுத்தாடினார். ஆட்டத்தின் 39 ஆவது நிமிடத்தில் அல்ஜீரி யாவின் மெஸ்பாவிற்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டது. 43 ஆவது நிமிடத்தில் அல்ஜீரியாவின் ஸ்லிமாணி அடித்த பந்தை அகின்பீவ் அருமையாக தடுத்தார். 45 ஆவது நிமிடம் முடியும் வரை இரு அணிகளும் மேலும் கோல் எதுவும் போடாத சூழலில் முதல பாதி ஆட்டம் முடிந்தது.

பின்னர் இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியது. 47 ஆவது நிமிடத்தில் ரஷ்யாவின் சமேடோவ் அடித்த பந்தை ரெய்ஸ் தடுத்தாடினார். 60 ஆவது நிமிடத்தில் அல்ஜீரிய அணியின் ஸ்லிமாணி அருமையான கோல் அடித்து கோல் கணக்கை சமன் செய்தார். பின்னர் ஆட்டத்தின் இறுதி நிமிடங்கள் வரை இரு அணிகளும் கோல் அடிக்காத நிலையில் 1-1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் டிரா ஆனது. ஆட்டநாயகனாக அல்ஜீரியாவின் ஸ்லிமாணி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## ஹட்ரிக் வெற்றிகளுடன் பெல்ஜியம்



உலக கோப்பை காற்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் கொரியாவும் பெல்ஜியமும் மோதின.

25 ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் மிரால்லாஸ் அடித்த பந்தை யுன் லாவகமாக தடுத்தார். 30 ஆவது நிமிடத்தில் கொரியாவின் கி அடித்த பந்தை கொர்டாய்ஸ் லாவகமாக தடுத்தார். 36 ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் மெர்ட்டனஸ் அடித்த பந்தை கொரியாவின் கிம் கோல் விழாமல் தடுத்தார். மீண்டும் 42 ஆவது நிமிடத்தில் மெர்ட்டனஸ் அடித்த பந்தை கிம் கோல் விழாமல் அற்புதமாக தடுத்தார்.

45 ஆவது நிமிடத்தில் கொரியாவின் கிம் ஷின்வுக்கின் காலில் எட்டி உதைத்ததற்காக ரெட் கார்டு வழங்கப்பட்டது. முதல் பாதி முடியும் போது இரு அணிகளும் ஒரு கோல் கூட போடவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கிய பின் 54 ஆவது நிமிடத்தில் கொரியாவின் லீ அடித்த பந்தை புடென் லாவகமாக தடுத்தார். 78 ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் வெட்ரோங்கென் அருமையான கோல் அடித்தார்.

பின்னர் இறுதிவரை இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காததால் 0:1 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் அணி வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக பெல்ஜியத்தின் தடுப்பாட்டக்காரரான வெட்ரோங்கென் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## போர்த்துக்கலுக்கு ஆறுதல் வெற்றி



உலக கோப்பை காற்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் கானா அணியும் போர்த்துக்கல் அணியும் மோதின. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல்லின் ரொனால்டோ அடித்த ப்ரீகிக் ஷொட்டை கானாவின் தாடா அற்புதமாக பாய்ந்து தடுத்தார்.

23 ஆவது நிமிடத்தில் கானாவின் க்யான் அடித்த பந்தை போர்த்துக்கல்லின் பீடோ லாவகமாக பாய்ந்து தடுத்தார். 31 ஆவது நிமிடத்தில் கானாவின் போயே சேம் சைடு கோல் அடித்தார். 32 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ அடித்த பந்தை கானாவின் தாடா லாவகமாக தடுத்தார். முதல் பாதி ஆட்டம் முடியும் வரை இரு தரப்பும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

பின்னர் இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியது. 48 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல்லின் நானி அடித்த பந்தை கானாவின் போயே லாவகமாக தடுத்தார். 54 ஆவது நிமிடத்தில் மீண்டும் நானி அடித்த பந்தை போயே மீண்டும் லாவகமாக தடுத்தார். 57 ஆவது நிமிடத்தில் கானாவின் கியான் அருமையாக கோல் அடித்து அசத்தினார்.

80வது நிமிடத்தில் போர்த்துக்கல்லின் ரொனால்டோ அடித்த பந்து கோலானது. மீண்டும் 90 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ அடித்த பந்தை தாடா அற்புதமாக தடுத்து கோல் விழாமல் காப்பாற்றினார். இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் கானாவை போர்த்துக்கல் வீழ்த்தியது. ஆட்டநாயகனாக போர்த்துக்கல்லின் ரொனால்டோ தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## பாரம்பரிய விளையாட்டுப் போட்டி

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நாளை 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான போட்டிகளாக சறுக்கு மரம் ஏறுதல், தலையணைச் சமர், மெதுவான சைக்கிளோட்டம், கண்கட்டி முட்டியுடைத்தல், சைக்கிள் சங்கீதக் கதிரை, வளையும் எறிதல், கயிறு இழுத்தல் என்பன இடம்பெறும்.

பெண்களுக்கான போட்டிகளாக மெதுவான சைக்கிளோட்டம், சங்கீத மேடை, கண்கட்டு யானைக்கு கண் வைத்தல், காலில் பலூன் கட்டி உடைத்தல், தண்ணீர்ப் போத்தல் தூக்குதல், தடை ஓட்டம், கயிறு இழுத்தல் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தினை வார நாட்களில் நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் மாலை 5 மணிவரை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் சங்கிலியன் மன்ற முன்றலில் இடம்பெறும். (கு)

## இன்றைய போட்டிகள்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் தும்பளை கருணை உள்ளம். விண்மீன் நற்பணி மன்ற அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான அணிக்கு ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி வல்வை ரெயின்போ மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் B விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதன் பின்னர் பிற்பகல் 4.30 மணிக்கு கருணாகரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் A விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.



வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட **ஹென்றீசியன் பிறிமியர் லீக்** மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் நடைபெறவுள்ள முதலாவது போட்டியில் அராலி A/L விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்லூட்ஸ் போயிட்டி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனையடுத்து மாலை 6 மணியளவில் நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியில் வல்வை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நசரேத் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதைத்தொடர்ந்து இரவு 7 மணியளவில் நடைபெறவுள்ள மூன்றாவது போட்டியில் நெடியகாடு விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மகாத்மா விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

இறுதியில் இரவு 8 மணியளவில் நடைபெறவுள்ள நான்காவது போட்டியில் சென்சேவியர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை வீழ்த்தியது ஜேர்மனி



உலக கோப்பை கால்பந்து போட்டியின் நேற்று முன்தினம் ஆட்டத்தில் ஜேர்மனி அணியும் அமெரிக்க அணியும் மோதின. ஆட்டத்தின் 10-வது நிமிடத்தில் ஜேர்மனிக்கு கோர்னர் ஷாட் வாய்ப்பு கிடைத்தது. க்ரூஸ் அடித்த கோர்னர் ஷொட்டை அமெரிக்காவின் ஜோன்சன் கோல் போடாதவாறு தடுத்தார்.

11-வது நிமிடத்தில் ஹொவேடேசுக்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது. 20வது நிமிடத்தில் ஜேர்மனி வீரர் முல்லர் கோலை நோக்கி அடித்த பந்தை ஹோவாரட் சாமர்த்தியமாக செயல்பட்டு தடுத்தார். 31வது நிமிடத்தில் ஜேர்மனி வீரர் க்ரூஸ் அடித்த பந்தை மீண்டும் லாவகமாக தடுத்தார் ஹோவார்ட். 37-வது நிமிடத்தில் அமெரிக்காவின் கோன்சாலெசுக்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது. முதல் பாதி ஆட்டத்தில் 60 சதவிகித நேரம் பந்து ஜேர்மனியின் கட்டுப்பாட்டில் கிடந்தது. இருந்தபோதும் முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் கோல் அடிக்கத் தவறின.

பின்னர் சிறிது நேர இடைவெளிக்கு பின் இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியது. 47-வது நிமிடத்தில் ஜேர்மனியின் ஸ்கீவின்ஸ்டர் அடித்த பந்தை அமெரிக்கா வின் பியாஸ்லி அற்புதமாக பாய்ந்து தடுத்தார். ஆட்டத்தின் 55வது நிமிடத்தில் ஜேர்மனி அணியின் முல்லர் அற்புதமான கோல் ஒன்றை அடித்தார். இதன் மூலம் 1-0 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி முன்னிலை வகித்தது. 62-வது நிமிடத்தில் அமெரிக்காவின் பெக்கர்மேனுக்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது.

90-வது நிமிடத்தில் அமெரிக்காவின் பெடோயா அடித்த பந்தை ஜேர்மனியின் லாம் லாவகமாக பாய்ந்து தடுத்தார். இறுதியில் கோ்ல் எதுவும் அடிக்காத அமெரிக்க அணியை வீழ்த்தி ஜேர்மனி ஒரு கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆட்டநாயகனாக ஜேர்மனியின் முல்லர் தேர்ந் தெடுக்கப்பட்டார். (க)

## றொனால்டோவின் புதிய ஹேர் ஸ்டைல்



போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் றொனால்டோ புதிய ஹேர் ஸ்டையில் விளையாடினார். இவரது விளையாட்டு எப்படியோ ஆனால் இவரது ஹேர் ஸ்டைல் பிரபலமானது. முன்பு தலையை ஒட்ட வெட்டி களத்தில் இறங்கிய ரெனால்டோவை அவரது ரசிகர்கள் விமர்சித்து வந்தனர்.

பின்னர் அந்த ஸ்டைல் 10 மாதம் ஆன மூளை நோயால் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தைக்காக வெட்டி கொண்டேன் என்று அவர் கூறினார். இந்நிலையில் கானா அணிக்கெதிராக களமிறங்கிய போட்டியில் றொனால்டோ புதிய வித்தியாசமான ஹேர் ஸ்டைலில் காணப்பட்டார். (க)


## ஆஸி ஓபன் பட்மின்டன் சாய்னா அரையிறுதியில்



அவுஸ்திரேலிய ஓபன் பட்மின்டன் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் அரையிறுதிக்கு முன்னேறினார். சிட்னியில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் காலிறுதிப் போட்டியில் 6-ம் தர நிலையில் உள்ள சாய்னா, எரிக்கோ ஹிரோசை (ஜப்பான்) 21-18, 21-9 என்ற நேர் செட்களில் வென்றார். இனி அரையிறுதியில் உலகின் இரண்டாம் தரநிலை வீராங்கனை ஷிஜியான் வாங்கை (சீனா) சாய்னா எதிர்கொள்கிறார்.

சீன வீராங்கனைக்கு எதிராக 4-3 என்ற வெற்றி சாதனையை சாய்னா பதிவு செய்துள்ளார். ஆனால், கடந்த கால ஆட்டங்களில் அடுத்தடுத்து வெற்றிகளை பெற்ற வாங்கை எதிர்கொள்வது சாய்னாவுக்கு சவாலாகவே இருக்கும். (க)

## மரண அறிவித்தல்



அமரர் இராமசாமி முத்துலிங்கம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூர் சங்கிலியன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இராமசாமி முத்துலிங்கம் நேற்று (27.06.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சற்குணகுமாரி (குஞ்சு) வின் அன்புக் கணவரும் கீர்த்திகா, சஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவதீபனின் மாமனாரும், ஏரகனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

12, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

(6974)

தகவல்:
குடும்பத்தினர்.

## நயினை...

மாதம் 11ம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், ஜூலை 13ம் திகதி ஞாயிற்றுக் கிழமை தெப்பத் திருவிழாவும் நடைபெறும். ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (எ-11)

## நீரில்...

இவர்களில் ஒருவர் தமிழ்ப் பெண்ணாக இனங்காணப்பட்டுள்ளார். தாம் வந்த படகு ஜூன் 13ஆம் திகதி தென்னிந்தியாவில் இருந்து புறப்பட்டதாக அவர் கூறினார்.

இது பற்றி குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசனின் பேச்சாளர் கருத்து வெளியிடுகையில், கடலில் உயிர்ப் பாதுகாப்பிற்கு தீவிர அச்சுறுத்தலாக அமையக்கூடிய எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளையே அரசாங்கம் ஊர்ஜிதம் செய்யுமெனத் தெரிவித்தார்.

நீர்க்கசிவு ஏற்பட்டுள்ள படகு பற்றி அரசாங்கத்திடம் தகவல் எதுவுமில்லையென அவர் கூறினார். (எ-11)

## ‘அலறல்...

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, கொலையுண்ட மதுசாவின் கணவரான யசோதரன், மன்றில் சாட்சியமளித்தார்.

கொலைகள் நடைபெற்ற அன்று தான் பிறிதொரு அறையில் படுத்திருந்தேன், எங்களை வெட்டுகின்றான் காப்பாற்றுங்கள் என்ற அலறல் சத்தம் கேட்டு வெளியில் வந்த போது எனக்கும் வெட்டு வீழ்ந்தது. இதனால் நான் சுயநினைவிழந்தமையினால் அதன் பின்னர் நடந்தமை தெரியவில்லையெனவும் தெரிவித்தார்.

மேலும், தனக்கும் தனஞ்சயனுக்கும் இடையில் தனிப்பட்ட பிரச்சினைகள் எதுவும் இல்லாத போதும், எனது மனைவி குடும்பத்திற்கும் அவருக்கும் இடையில் முரண்பாடுகள் இருந்தமையினைத்தான் அறிந்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அச்சுவேலி, கதிரிப்பாய் பகுதியில் மே மாதம் 4-ம் திகதி அதிகாலை ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த தாய், மகன் மற்றும் மகள் மூவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன், மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

நிர்க்குணானந்தன் அருள்நாயகி (50), யசோதரன் மதுசா (27), நிர்க்குணானந்தன் சுபாங்கன். (19) ஆகிய மூவரும் பலியாகியிருந்ததுடன், தனஞ்சயன் தர்மிகா (25), க.யசோதரன் (30) ஆகிய இருவரும் படுகாயமடைந்திருந்தனர்.

ஏற்கெனவே தனஞ்சயனின் மனைவியான தர்மிகா கடந்த 13-ம் திகதி நீதிமன்றில் ஆஜராகி தனது முதலாவது சாட்சியத்தினைப் பதிவு செய்தார். இந்நிலையில் நேற்று கொலையுண்ட மதுசாவின் கணவரான யசோதரன் தனது சாட்சியினைப் பதிவு செய்திருந்தார். (எ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வன்முறை...

இலங்கை வருவதை தவிர்க்கத் தொடங்கி னர்.

எனினும் நிலைமையை புரிந்து கொள் ளாத அரசாங்கம் பொது பல சேனாவினரை கட்டுப்படுத்த தவறியது. இதன் காரணமாக அண்மையில் அளுத்கமவில் பாரிய இனக் கலவரம் வெடித்தது.

இதனையடுத்து தற்போது அவுஸ்திரே லியா, ஐரோப்பிய நாடுகளின் சுற்றுலாப்பய ணிகள் முற்றாக இலங்கையை புறக்கணிக் கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஏற்பட்டுள்ள அந்நிய செலாவணி இழப்பு இலங்கைப் பொருளா தாரத்தில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர். (எ-11)

## குடும்பப்...

வாள்வெட்டு இடம்பெற்றதாக தெரிய வருகிறது.

குறித்த நபர் மனைவியை வெட்டியதோடு தானும் கிணற்றினுள் குதித்துள்ளார்.

அயலவர்களின் உதவியோடு இவர் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டு தற்போது சுன்னாகம் பொலிஸாரின் தடுப்பில் வைக் கப்பட்டுள்ளார். (எ-78)

## ஐ.நா...

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவ நீதம்பிள்ளை மூன்று நிபுணர்களை நிய மித்திருந்தார்.

இதன்படி பின்லாந்தின் முன்னாள் ஜனா திபதி மார்ட்டி அதிசாரி, நியூசிலாந்தின் முன் னாள் நீதிபதி டேம் சில்வியா கார்ட்ரைட் மற் றும் பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் சட்ட வாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் அஸ்மா ஜஹாங்கிர் ஆகிய மூவரும் இந்த விசார ணைக்குழுவின் நிபுணத்துவ ஆலோசகர்க ளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இக்கூட்டத்தொடரின் போது இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான ஐ.நாவின விசேட அறிக்கையாளர் சலோகா பெயானியும தனது அறிக்கையை சமர்ப்பித்திருந்தார்.

இலங்கைக்கு கடந்த டிசம்பர் மாதம் விஜ யம் செய்த அவர் இலங்கையின் மீள்குடி யேற்றம் குறித்த விசேட அறிக்கை ஒன்றை இக்கூட்டத்தொடரில் கையளித்து, உரையா ற்றியிருந்தார்.

இவ்வறிக்கையில் இலங்கையில் நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நிலையில் இருக் கின்ற மக்களின் நிலை குறித்தும், வடக்கில் மீள்குடியேற்றப்பட்டு ஆபத்தான நிலையில் வாழ்கின்ற மக்கள் குறித்தும் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியிருந்தார்.

இக்கூட்டத்தொடரே ஐ.நா மனிதவுரிமை கள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஆணை யாளராக கலந்து கொள்ளும் இறுதிக் கூட் டத்தொடராகும். அவர் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்துடன் ஓய்வுபெறவுள்ளார்.

அவருக்குப் பதிலாக ஜோர்தான் இளவர சர் செயித் அல் ஹுசைன் புதிய ஐ.நா மனித வுரி மைகள் ஆணையாளராக ஐ.நா செயலாளர் நாய கம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு வின் 27வது கூட்டத்தொடர் எதிர்வரும் செப் டெம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இக் கூட் டத்தொடரில் இலங்கை குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழு தனது வாய்மூல அறி க்கையை வெளி யிட வுள்ளமை குறிப்பிட த்தக்கது (எ-11)

## மத்திய...

த்தி நீர்ப்பாசனம் சுற்றாடல் அமைச்சின் திட்டத்தின் கீழ் வட்டக்கச்சி புளுதி ஆற்றை மையமாக வைத்து ஏற்றுநீர்ப்பாசன திட்டத்தின் கீழ் 100 ஏக்கர் பரப்பளவில் 32.0 மில்லியன் ரூபா நிதியில் உரு வாக்கப்படவுள்ள வேலைத்திட்டத்தின் தொடக்க விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய முதலமைச்சர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த புளுதி ஆற்றுத்திட்டம் இந்த பிரதேச மக்களுக்கு சிறந்த வரப்பிரசாதமாக அமை கின்றது. இதன் மூலம் பசுமை நிறைந்த மண் ணாக இந்த இடங்கள் மாற்றம் பெற நான் இறை வனை வேண்டுகின்றேன்.

எமக்கு உள்ள நிதியில் வடமாகாண சபை யின் திட்டமாக இதுஅமைகின்றது. நான் பத்திரி கைகளில் பார்த்தேன் எமது வடமாகாண சபை க்கு 5கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் நாம் ஏதோ வேலைகள் செய்யாதவர்களாக இருப்ப தாகவும் பரப்புரை செய்யப்படுகின்றது.

ஆனால் அதில் உண்மை இல்லை. அந்த 5 கோடி ரூபாவில் கிட்டத்தட்ட 4கோடி ரூபா அர சாங்கத்தின் பிடிக்குள்ளேயே இருக்கின்றது. இதுவே உண்மை என்று முதலமைச்சர் குற்றம் சாட்டினார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வட மாகாண அமைச்சர்களான பொ.ஐங்கர நேசன், த.குருகுலராஜா, வட மாகாண சபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, ப.அரிய ரத்தினம் ஆகியோரும் வட மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், நீர்ப்பாசன திணைக் களத்தின் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன திணைக்கள எந்திரி உட்பட வட்ட க்கச்சி பிரதேசத்தை சேர்ந்த விவசாய அமைப்பு க்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-6)

## ஜனாதிபதி...

த்தையின் போது இரு நாடுகளுக்கும் இடை யிலான நெருக்கமான செயற்பாடுகளுக்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

மேலும் இருதரப்பு உறவை வலுப்படு த்தும் வகையில் மூன்று புரிந்துணர்வு ஒப் பந்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் சீஷெல்ஸ் இன் விசேட அழைப்பை ஏற்று நேற்று ஜனாதிபதி அங்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டார்

இதன்போது சீஷெல்ஸ் இல் புதிதாக திற க்கப்படவுள்ள இலங்கைத் தூதரக நிகழ் விலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார். (எ-11)

## நவிபிள்ளை...

இடம்பெற்ற முஸ்லிம் விரோத கலவரங்க ளும் இந்த குழுவின் விசாரணைகளுக்கு பரிந்துரைக்கும் எனக் கூறப்படுகிறது.

இந்த சம்பவங்கள் இடம்பெற்ற மறுதி னம் சம்பவங்களுக்கு கண்டனம் வெளியி ட்டிருந்த நவநீதம்பிள்ளை, கொழும்பு அரசா ங்கம் அனைத்து சிறுபான்மை மதத்தினரை பாதுகாக்க வேண்டும் என அழைப்பு விடுத்தி ருந்துடன் அஸ்மா ஜஹாங்கீரை நிபுணர்கள் குழுவின் உறுப்பினராக நியமித்திருந்ததாக ஜயதிலக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

பாலஸ்தீனத்தின் காசாவின் மோதல்க ளில் இடம்பெற்ற மீறல்களை கண்டறிய ஐ.நா ரிச்சர்ட் கோல்ட்ஸ்டோன் என்ற ஒரு நபரை மட்டுமே நியமித்திருந்தது.

எனினும் இலங்கை மீதான விசாரணை களுக்கு மூவர் கொண்ட குழுவை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் நியமித்துள்ளது. இந்தக் குழு மிகவும் வலுவா னதும் கனத்தை எடையையும் கொண்டது எனவும் தயான் ஜயதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

12 உறுப்பினர்களை கொண்ட ஐ.நா வின் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைக்குழு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் தனது விசாரணை அறிக்கையை கையளிக்க வேண்டும் என்ப துடன் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழை ப்புகளை பொருட்படுத்தாமல் இந்த விசார ணைகள் நடத்தப்பட உள்ளன. (எ-11)

## அமெரிக்கா...

மூன்றாவது தரப்பின் ஊடாக ஈரானிடம் இருந்து எண்ணெயை கொள்வனவு செய்வதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல எதற்காக குறிப்பிட்டார் என்று எனக்குத் தெரியவில்லை.

இலங்கை பெற்றோலியத்துறை அமைச்சர் என்ற வகையில், இவ்வாறு மூன்றாவது தரப்பின் ஊடாக ஈரானிடம் இருந்து எண் ணெய் கொள்வனவு செய்யப்படவில்லை என்பதை நான் உறுதிப் படுத்துகிறேன்.

அமெரிக்காவின் தடையால் இலங்கை நெருக்கடியை எதிர் கொள்கிறது. ஏனெனில், நாட்டின் ஒரே எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையான சபுகஸ்கந்தையில் ஈரானிய எண்ணெயை மட்டுமே சுத்திகரிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## புலிகளுக்கு...

எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் குருக்கள்மடத்துக்கு அரசாங்கம் முககி யத்துவம் வழங்கி யிருப்பதானது, விடு தலைப் புலிகளுக்கு எதிராக திட்டமிட்டே அரசாங்கம் குற்றச் சாட்டுகளை தயாரி த்து வருகிறது என் பதை எடுத்துக் காட் டுவதாக அவர் குறிப் பிட்டுள்ளார். (எ-11)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
THE ONLY OFFICIAL FRENCH LANGUAGE & CULTURAL CENTRE
FRENCH மொழியை FRENCH முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
☞ கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது, யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம். விரைவான பேச்சு ஆற்றல், STANDARD PRONUNCIATION,
☞ வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் (வடமராச்சி, வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) AF இல் படித்தே பிரான்ஸ் செல்கிறார்கள். குறிப்பு : பிரான்ஸில் பிரெஞ் கற்பதற்கு AF இன் CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF A1, A2 = ILTES : AF இன் கிளைகளில் மட்டுமே எழுத முடியும்) மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றன.
இன்றே பதிவுசெய்யுங்கள்... புதிய வகுப்புகள் மிக விரைவில்...
தனிநபர்களிடம் சென்று பணத்தையும் நேரத்தையும் இழக்காதீர்கள்.
☞ வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்...
61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093.
கச்சேரி → ✝ → AF / ஆரியகுளம் → ஸ்ரான்லி றோட், றக்கா றோட் → AF

One Day Training Programme
Isometric Drawings in Auto CAD
Commence on: 29-06-2014 Sunday
Lecturer By: K.N.Muguntthan(D/A)
Cert.in Auto CAD(2D-3D) Cert.in Advance 3D Modeling
University of Peradeniya University of Moratuwa
Architectural CAD Centre
Contact No:0718617972
(C-7652)

கருத்தரங்கு
A/L - 2014
ECONOMICS
ஆசிரியர் :
வீ.பரமேஸ்வரன்
B.BA (Hons.), MA (Econ)
St.Joseph's College, Colombo - 10
இடம் : வீரசிங்கம் மண்டபம்-யாழ்ப்பாணம்
காலம் : July 6 Sunday (6/7/2014)
8.00 மணி முதல் 5.00 மணி வரை
கட்டணம் : 500 ரூபா
குறிப்பு : அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்தல் வேண்டும்
அனுமதிகளை பெற்றுக்கொள்ள
K-AIMS
147-2/2 K.K.S.Road
(Top of HSBC Bank, Jaffna)
Gana - T.P: 0772485731
V.சாயீஸ்வரன்
T.P: 0774536951
0776701601
(6971)

IELTS Special Class
செப்ரெம்பர் 06ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புக்கள் சனி மற்றும் ஞாயிறு காலை 8.30 தொடக்கம் 11.30 வரை திங்கள் தொடக்கம் வியாழன் வரை காலை 7 மணி முதல் 8.30 மணி வரை மாலை 5 மணி தொடக்கம் 7.30 மணி வரை நடைபெறும்.
வகுப்புக்கள் ஆரம்பம் 02.07.2014
More Than 10 Years Experience
Extended Speaking practice
We are "IELTS" Registration center fr british Council"
THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINNING PRGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5
(6938)
BRITISH COLLEGE OF ENGLISH
# 192, Navalar Road, Jaffna. Tel: 021 222 0384 / 0778803887

வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை



உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்
ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-7757)
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org